மாநகராட்சி மன்றம்


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 மாசி 3 திங்கட்கிழமை (15-02-1999) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:68


## பெப்.26 ஆம் திகதி

# சமாதானம் வேண்டி கொழும்பில் பேரணி!

## 20 ஆயிரம் பேர் பங்குபற்றுவர்

கொழும்பு, பெப்ரவரி 15

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு வற்புறுத்தி இம் மாதம் 26 ஆம் திகதி கொழும்பில் சமாதானப் பேரணி ஒன்றும் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளன.

சமாதானத்துக்கான தேசிய கூட்டமைப்பு இந்தப் பேரணியையும் பொதுக் கூட்டத்தையும் ஏற்பாடு செய்துள்ளது.

இந்தக் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் பேராசிரியர் திஸ்ஸ விதான கொழும்பில் விடுத்துள்ள அறிக்கையில், விடுதலைப் புலிகளும் சமாதானத்துக்கான விருப்பத்தை வெளிக்காட்டி இருப்பதால் இனப்பிரச்சினைக்கு சமாதானமான முறையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்,

எதிர்வரும் 26 ஆம் திகதி பிற்பகல் 2,00 மணிக்கு காம்பெல் பார்க்கில் இருந்து இந்தப் பேரணி ஆரம்பமாகும். பிற்பகல் 4. 00 மணிக்கு பேரணி ஹைட்பார்க்கை அடைந்து அங்கு பொதுக் கூட்டம் நடத்தப்படும்.

இந்தப் பேரணியில் 20 ஆயிரம் பேர் கலந்து கொள்வார்கள் என்றுபேராசிரியர் திஸ்ஸ விதான தெரிவித்தார்.

சமூக நீதிக்காகக் குரல் கொடுக்கும் 100 க்கு மேற்பட்ட அமைப்புகள், இந்தப் பேரணியில் கலந்து கொள்ள இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நேற்று நீக்கம் கடைசி நேரம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 15

மகாசிவராத்திரியை ஒட்டி யாழ். மாவட்டத்தில் நேற்றிரவு ஊரடங்கு நீக்கப்பட்டது தொடர்பான தகவல் முன்கூட்டியே வெளியிடப்படாததால் மக்கள் பெரிதும் சிரமங்களுக்கு உள்ளாகினர் என்று தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் ஊரடங்கு நேற்றிரவு நீக்கப்பட்டதகவல் நேற்றுப் பகல் தான் பலாலி வானொலி மூலமும் ரூபவாஹினி மூலமும் அறிவிக்கப்பட்டது.

இந்தத் தகவல் பொதுமக்களை சரியான முறையில் — சரியான நேரத்தில் — எட்டாத காரணத்தால் பெரும் அசௌகரியங்களை அவர்கள் எதிர் நோக்கினர் என்று கூறப்பட்டது.

கடைசி நேரத்தில் வெளி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட் வெடிப்பு

நெல்லியடி, பெப். 15

வல்வெட்டித்துறை நெடிய காட்டுச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 5.30 மணியளவில் கிரனேட் ஒன்று வெடித்தது.

சேத விவரம் தெரியவரவில்லை. (இ-3-109)

## ஈ. பி. டி. பி. பிரதேசசபை உறுப்பினர் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்!

### அச்செழுவில் சம்பவம்

யாழ்ப்பாணம். பெப். 15

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஈ. பி. டி. பி. உறுப்பினர் பண்டாரி கந்தசாமி (52 வயது) நேற்றுக் காலை 10 மணியளவில் அச்செழுவில் வைத்து இனந்தெரியாதோரால் 'சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

ஆவரங்காலைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான இவர் தமது மனைவியுடன் நேற்றுக்காலை 7 மணிக்கு அச்செழு மெதடிஸ்த தேவாலயத்துக்குச் சென்றார்.

அங்கு நடந்த ஆராதனையில் பங்கு கொண்ட பின்னர் வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் அவர்சென்ற சைக்கிளை வழிமறித்த இனந்தெரியாத இளைஞன் ஒருவர் ''நீதான் கந்தசாமியா?'' என்று கேட்டார் என்றும்—

அவர் பதில் அளிக்கவே அவர் மீது சுட்டுவிட்டு அந்த இளைஞன் தப்பி விட்டார் என்றும்— தெரிவிக்கப்படுகிறது.

காதுப்பக்கத்திலும், முதுகிலும் படுகாயம் அடைந்து அந்த இடத்திலேயே அவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் அடுத்த நடவடிக்கை மல்லாவிப் பகுதியை நோக்கி?

கொழும்பு, பெப். 15

வன்னியில் மல்லாவியை இலக்கு வைத்து இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்க படையினர் முஸ்தீபு செய்வதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நடவடிக்கை ஏற்பாடு தொடர்பான தகவல் முன்னரே வெளியாகிவிட்டதாகவும் —

அப்பகுதியில் இயங்கும் சர்வதேச தொண்டர் அமைப்பு அப்பகுதியில் இருந்து தாம் வெளியேற வேண்டுமா என்று பாதுகாப்பு அமைச்சிடம் கோரியதாகவும் —

இந்த நடவடிக்கை தொடர்பான தகவல் எவ்வாறு வெளியானது என்பது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும்— அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஆகியன மல்லாவியில் இயங்குவது குறிப்பிடத்தக்கது.

## அடுத்த கப்பல் சேவை உடனடியாக இல்லை

### லங்கா முடித்த காலிக்கு

யாழ்ப்பாணம், பெப். 15

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான 'லங்கா முடித்த' பயணிகள் கப்பல் சேவை மறு அறிவித்தல் வரை நடைபெற மாட்டாது என்று திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் வி. வேலும்மயிலும் தெரிவித்தார்.

திருகோணமலையில் இருந்து ஆயிரத்து 150 பயணிகளுடன் காங்கேசன்துறைக்கு நேற்று முன்தினம் வந்த இந்தக் கப்பல் ஆயிரத்து 150 பேருடன் திருகோணமலை நோக்கி நேற்று புறப்பட்டது.

திருகோணமலையில் பயணிகளை இறக்கிவிட்டு இக்கப்பல் காலி சென்று குடாநாட்டுக்கான 20 பஸ்களை ஏற்றி வரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தர கப்பல் சேவை குறித்து ஆராயப்படும்

### கொழும்பில் நாளை மாநாடு

கொழும்பு, பெப் 15

வடக்குக்கு நிரந்தரமான பயணிகள் கப்பல் சேவை ஒன்றை நடத்துவது தொடர்பாக நாளை கொழும்பில் மாநாடு ஒன்று நடைபெறவிருக்கின்றது.

நிரந்தர கப்பல் சேவையை அரசாங்கம் நடத்துவதா? அல்லது தனியார் நிறுவனங்கள் நடத்துவதா? அல்லது தொண்டர் நிறுவனங்களின் உதவியுடன் நடத்துவதா? என்பன குறித்து இங்கு ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நாளைய மாநாட்டின் பின்பே இந்தச் சேவை தொடர்பான இறுதி முடிவு தெரியும் என்று வட மாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

''அசத் மரைம்'' என்னும் தனியார் கப்பல் நிறுவனம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் இச்சேவையை நடத்த முன்வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (இ-3-10)

## புளொட், ரெலோ

## ஒவ்வோர் அலுவலகம் வைத்திருக்க அனுமதி

கொழும்பு, பெப். 15

வவுனியாவில் இயங்கும் புளொட், ரெலோ அமைப்புக்கள் ஒவ்வோர் அலுவலகத்தை மட்டும் வைத்துச் செயற்பட அனுமதிப்பது என்று பாதுகாப்புப் படையினர் முடிவு செய்துள்ளனர். என்று தெரிவிக்கப்பட்டது.

புளொட், ரெலோ அமைப்புக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல்களை அடுத்து இந்த முடிவைப் படையினர் எடுத்துள்ளனர் என்றும் —

இந்த அமைப்புக்களின் உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் நடமாடுவதைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்புக்கள் தமது அரசியல் மற்றும் இராணுவ முகாம்களை மூடி ஓர் இடத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் அமைப்புகளை கலைக்கக் கோரிக்கை

வவுனியா, பெப். 15

வவுனியாவில் இயங்கும் தமிழ்க் கட்சிகள் தமது மாணவர் அமைப்புக்களைக் கலைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் புளொட் — ரெலோ அமைப்புகளுக்கிடையில் ஏற்பட்ட மோதல்களை அடுத்து இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலுள்ள சமயத் தலைவர்கள், மத சார்பற்ற

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் மோசடி குறித்து

## பொ. ஐ. மு. கட்சிகள் ஜனாதிபதிக்கு நெருக்குதல்

கொழும்பு, பெப். 15

வடமேல் மாகாண சபைத் தேர்தலின் போது இடம்பெற்ற மோசடிகள், வன்முறைகள் தொடர்பாக அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளன.

அங்கு இடம்பெற்ற மோசடிகள், வன்முறைகள் ஆகியவற்றுக்கு சூத்திரதாரிகள் யார் என்ற விவரங்களை வெளியிடுமாறு அரசில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சிகளும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித்பிரிவு) யும் ஜனாதிபதியிடம் கோரியுள்ளன.

இந்த வன்முறைகளை மேற்கொண்டவர்களைக் கண்டுபிடிக்க குழுஒன்றை அமைக்குமாறு ஜனாதிபதிக்கு அந்தக் கட்சிகள் நெருக்குதல்கொடுத்துள்ளன. (இ-3-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு யோகநாதன்

(செய்தி ஆசிரியர் — ஈழநாடு)

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் இல. 5, அத்தியடி புது வீதியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கார்த்திகேசு யோகநாதன் 14 — 02 — 99 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான வழக்கறிஞர் கார்த்திகேசு — சரஸ்வதிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் கிரிதரன் (வவுனியா), தமிழினி (ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**திருமதி த. யோகநாதன்**
(மனைவி)

5, புதுவீதி,
அத்தியடி.

[63120]

---

திருமதி

## விஜியலட்சுமி நாகராசா

( அல்லைப்பிட்டி )

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் 2 ஆம் குறுக்குத்தெரு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜியலட்சுமி நாகராசா 13 - 02 - 99 அன்று காலமாகி விட்டார்.

இவர்காலஞ்சென்றதிரு.திருமதிஅப்பையா நல்லம்மா ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற நாகராசாவின் அன்பு மனைவியும் உதயசந்திரிகா (ஜேர்மனி), உதயசாந்தி, உதயச்சந்திரன் (ஜேர்மனி), உதய சூரியன் (சுவிஸ்), உசாந்தினி (ஜேர்மனி), உமா பாலினி, தர்சினி, தய ளன் ஆகியோரின் அன்புத் தாயாரும் முருகத ஸ், ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், துஷியந்தி, சுதர்சன், கீர்த்தனன், சுகிர்தன், துவாரகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் புனிதசுந்தரி, நித்தியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-02 99) திங்கட்கிழமை நண்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

2 ஆம் குறுக்குத் தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(63126)

---

## சின்னத்தம்பி துரைராசா

மாவிட்டபுரம் மேற்கு தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவில் கிழக்கு ''நாமகள் ஒழுங்கை'' கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான சின்னத்தம்பி துரைராசா 13-02-1999 இல் இறைவனடி எய்தினார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சரஸ்வதி செல்வரத்தினத்தின் சகோதரரும், சிவனேசன் (சவுதி), செல்வரதி. குக நசன் (லிபியா), தவநேசன் (சிற்றி ரெக்ஸ்), குணநேசன் (ராசி சில்க்), புவனேசன் (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரமேஸ்வரன் (மாலைதீவு), தவச்செல்வி, பாலறஜனி (ஆசிரியை, தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கம்சா, கஜன், பிரவீனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14-02-99 மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மனைவி,**
**மக்கள், மருமக்கள்:**

''நாமகள் ஒழுங்கை,''
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(63118)

---

## கந்தா இராசையா

மீசாலை மேற்கைச் சேர்ந்த கந்தர் இராசையா 14. 02.99 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

இவர் சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், செல்லம்மா, யோகராசா (உதவி முகாமையாளர்-மக்கள் வங்கி, கன்னாதிட்டி), தங்கவேலு (டோகா), நாகேஸ்வரி, சிவலோகநாதன் (பிரான்ஸ்), யோகேஸ்வரி, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தேவராசா, சிவாம்பிகை, மல்லிகாதேவி, கமலநாதன், செல்வகுமாரி (பிரான்ஸ்), ஈஸ்வரன், (ஈசன் களஞ்சியம், சாவகச்சேரி) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(15-02-99) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
**குடும்பத்தினர்.**

வங்களா வீதி,
மீசாலை மேற்கு.
மீசாலை.

(63119)

---

## இலங்கையில் செய்மதி தொலைபேசி

இலங்கையில் செய்மதி தொலைபேசிச் சேவை அறிமுகம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள லிபியன்-இந்திய ரெலிகொம் கம்பனி இலங்கையில் இந்தச் சேவையை ஆரம்பிப்பது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## விசேட அடையாள அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 15

குருநகர் கிழக்கு (ஜே.70) கிராம சேவையாளர் பிரிவுக்கான விசேட அடையாள அட்டை விநியோகம் இன்று காலை 9-30 மணிக்குக் குருநகர் இராணுவ முகாமில் இடம்பெறவுள்ளதாக அந்தப் பகுதி கிராம சேவையாளர் க. நித்தியானந்தன் அறிவித்துள்ளார். [இ-3]

## காங்கேசன் விஜயம்

யாழ்ப்பாணம், பெப். 15

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பார்வையிடுவதற்காக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி எஸ். சிறீதரன் நாளை மறுதினம் புதன்கிழமை அங்கு செல்கிறார். [இ-6]

## அதிபர்களுக்கு அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 15

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்குச் சீருடைகள் வழங்குதல் தொடர்பாக அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கும் கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருப்பதாக வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-3)

**ராஜா**
யாழ்ப்பாணம்.
அஜித் - தேவயானி
ஹீரா - மணிவண்ணன்
கரன் நடித்த
**காதல் கோட்டை**
இன்று காட்சிகள்
10-30, 2-30,
(சி/6410)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
இன்று முதல்
அஜித்குமார் - காஞ்சன்
நடித்த
உன்னைத்தேடி
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரம்)
T. P. No. 070-212223
(63093)

**நாகம்ஸ்**
பிரபு, சுகன்யா,
ராதாரவி, விசு
நடித்த
**சின்னமாப்ளே**
காட்சிகள்: 10-30, 2-30
(63098)

## மின்கம்பத்துடன் மினிபஸ் மோதியது பயணிகள் மயிரிழையில் உயிர் தப்பினர்

யாழ்ப்பாணம், பெப். 15

பயணிகளை ஏற்றி வந்த மினிபஸ் ஒன்று மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. எனினும் தெய்வாதீனமாக பயணிகள் எவரும் காயமடையவில்லை.

யாழ். நகரில் நாவலர் வீதி பிறவுண் வீதிச் சந்தியில் நேற்றுக்காலை 10.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

பிறவுண் வீதி வழியாகச் சைக்கிளில் வந்த பெண் ஒருவர் யாழ். நகர் நோக்கி வந்து கொண்டிருந்த மினிபஸ்ஸின் குறுக்காக வீதியைக் கடக்க முற்பட்டார் என்றும்— அவருடன் ஏற்படவிருந்த விபத்தைத் தவிர்ப்பதற்கு மினிபஸ் சாரதி முயன்றபோது கட்டுப்பாட்டை இழந்த மினிபஸ் வீதியின் மறு கரையில் இருந்த மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது என்றும்—தெரிவிக்கப்பட்டது.

மினிபஸ் மோதிய வேகத்தில்மின்சாரக்கம்பம் முறிந்து. மினிபஸ் மீதே விழுந்தது இதனால் மினிபஸ்ஸின் முன் பகுதி பலத்தசேதமடைந்தது.

இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலீஸார் மினிபஸ்ஸுடன் அதன் சாரதியை விசாரணைக்காகயாழ். பொலீஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். (இ-6-15

---

# கண்ணீர் அஞ்சலி

யா/சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலய ஆசிரியை

திருமதி

## கீதாஞ்சலி குகநேசன்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**மாணவர்கள், ஊழியர்கள்.**
**யா/ சண்டிலிப்பாய் இந்து ம.வி.**

(சி/6501)

---

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## கீதாஞ்சலி குகநேசன் B. A.

(காரைநகர்)

(ஆசிரியர் யா / சண்டிலிப்பாய்
இந்து மகா வித்தியாலயம்)

மாகியம்பதி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கீதாஞ்சலி குகநேசன் 14 - 2 - 99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் நா. குகநேசன் (தபால் அதிபர், வலந்தலை, காரைநகர்) அவர்களின் அன்பு மனைவியும், திரு. ச. நாகலிங்கம் (இளைப்பாறிய அதிபர்), திருமதி நேசமலர் நாகலிங்கம் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற திரு. நாராயணன், திருமதி பத்தினி நாராயணன் ஆகியோரின் அன்பு மருமகளும், அன்ரன்ராஜ் (டோகா), றோஸ் மேரி (அளவெட்டி அரசினர் வைத்தியசாலை), செபராஜ் (யாழ். செயலகம்), நிக்ஷலா (மாணவி, அளவெட்டி றோ. க. த. க. பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரஸ்வதியின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (15 – 02 – 99) திங்கள் பி. ப. 1.00 மணிக்கு கீதா பவனம் மாகியம்பதி சண்டிலிப்பாயில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**நா. குகநேசன்**
(கணவர்)

'கீதா பவனம்',
மாகியம்பதி,
சண்டிலிப்பாய்.

(63122)

---

திருமதி

## மறியாசுலோசனா யோசவ்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், நீர்கொழும்பு இல. 65, கிராண்ட் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மறியா சுலோசனா யோசவ் 11-02-99 காலை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் ஜி. எம். ஜே. யோசவ் அவர்களின் அன்பு மனைவியும், டிலக்ஷன், டயானி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. திருமதி சூசைப்பிள்ளை அல்போன்சஸ் மேரிதிரேசா தம்பதிகளின் அன்பு மகளும் திரு. திருமதி வி. எம். ஜோசவ் (மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்) அவர்களின் மருமகளும் றோகினி (லண்டன்), அன்ரன் பேணாட் (லண்டன்), குணம் (பிரான்ஸ்), சாந்தினி (லண்டன்), றோகான் (பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் றஜனி (லண்டன்), சாந்தா (பிரான்ஸ்), ராஜன் (லண்டன்), வேணி (பண்டத்தரிப்பு) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரது நல்லடக்கம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நீர்கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**அ. றோகான்** (சகோதரன்)
பொந்தி ஒழுங்கை,
பண்டத்தரிப்பு.

**ஜி. எம். ஜே. யோசவ்** (கணவன்)
இல. 65, கிராண்ட் வீதி,
நீர்கொழும்பு.
தொ. பே. எண் 031-34300

(63123)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலித்துகள் கொலையை அடுத்து பீஹார் மாநில அரசு கலைப்பு!

## ஜனாதிபதி ஆட்சி அங்கு பிரகடனம்

பட்னா, பெப். 15

பீஹார் மாநிலத்தில் ராப்ரி தேவி தலைமையிலான மாநில அரசு வெள்ளிக்கிழமை இரவு கலைக்கப்பட்டது. அங்கு உடனடியாகவே ஜனாதிபதி ஆட்சி அமுலுக்குக் கொண்டு வரப்பட்டு நிர்வாக அமைப்புகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி தலைமையில் கூடிய அமைச்சரவை செய்த பரிந்துரையை ஏற்று ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் ஆட்சிக் கலைப்புக்கான உத்தரவை விடுத்தார்.

கல்கத்தாவில் தங்கியிருந்த ஜனாதிபதிக்கு அமைச்சரவையின் சிபார்சுக் கடிதம் அனுப்பப்பட்டது. பிரதமர் வாஜ்பாய் வெளிநாடு சென்றுள்ள சமயம் அத்வானி தலைமையில் கூடிய அமைச்சரவை இந்த முடிவை எடுத்தது குறிப்பிடத்தக்கது. கூட்டம் முடிந்த பின்னர் அத்வானி பிரதமருடன் தொலைபேசியில் உரையாடினார்.

பீஹாரில் ஜகன்னாபாத் மாவட்டத்தில் புதன் இரவு 12 தலித்துக்கள் கொல்லப்பட்டதை அடுத்து மாநில அரசைக் கலைக்கும் முடிவு எடுக்கப்பட்டது. (ஐ-10)

# பீஹாரில் தலித்துக்கள் கொல்லப்படுவது ஏன்?

பட்னா, பெப். 15

பீஹார் மாநிலத்தில் இடதுசாரிளுக்கு எதிராகச் செயற்படும் 'ரணவீர் கசனை' (பண்ணையார் படை) என்ற தேனிப்பட்ட ஆயுதப்படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களே ராப்ரி தேவி அரசைக் கலைப்பதற்கு காரணமாய் அமைந்து விட்டன.

நாராயண் பூர் என்ற கிராமத்தில் கடந்த புதனன்று 12 தலித் மக்களை இக்குழு சுட்டுக் கொன்றது. அதன் எதிரொலியாகவே மாநில அரசைக் கலைக்குமாறு மத்திய அரசு உத்தர விட்டது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி சங்கர் கா என்ற மாவட்டத்தில் குழந்தைகள் பெண்கள் உட்பட 22 தலித்துக்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்தத் தாக்குதல்கள் ஏன் நடக்கின்றன?

நிலப் பிரபுகளின் நிலங்களில் குறைந்த கூலிக்கு வேலைக்குப் போக வேண்டாம். என்றும், அவர்களின் சுரண்டல்களுக்கு துணை போகும் விதத்தில் உதவிகளை வழங்க வேண்டாம் என்றும் இடது சாரி அமைப்புக்கள் தலித் மக்களுக்கு உத்தர விட்டுள்ளன.

மக்கள் யுத்தக் குழு, மாவோயிஸ்ட்டு, கம்யூனிஸ்ட் மையம், மார்க்ஹிஸ்ட் லெனினிஸ்ட், கம்யூனிஸ்ட் (லிபரேஷன்) ஆகிய நக்சலைட் அமைப்புகள் பீஹாரில் செயற்பட்டு வருகின்றன. இவற்றின் செல்வாக்கைத் தகர்க்கவும், தலித் மக்களை அடக்கி ஒடுக்கவுமே நிலச்சுவாந்தர்கள் சேர்ந்து 'ரணவீர்' என்ற ஆயுதப் படையை அமைத்துள்ளனர்.

(ஐ-10)

# பதவியில் இருக்கும் அருகதை பீஹார் முதல்வருக்கு இல்லை

## சோனியா தெரிவிப்பு

புதுடில்லி, பெப். 15

பீஹாரில் ஆட்சி செய்யும் தார்மிக உரிமையை முதல்வர் ராப்ரி தேவி இழந்துவிட்டார் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கூறியுள்ளார்.

ஜகன்னாபாத் மாவட்டம் நாராயண்பூரில் 11 தலித்துகள் புதன்கிழமை இரவு கொல்லப்பட்ட சம்பவம் குறித்து அதிர்ச்சி தெரிவித்த சோனியா இத்தகைய கொடூரமான சம்பவங்களைத் தடுத்து நிறுத்தத் தவறும் எந்த அரசுக்கும் ஆட்சியிலிருக்கும் தார்மீக உரிமை இல்லை என்று ஓர் அறிக்கையில் கூறியுள்ளார்.

எனினும் பீஹாரில் ராஷ்ட்ரீய ஜனதா தளம் அரசுக்குக் காங்கிரஸ் கட்சி அளிக்கும் பிரச்சினைகளின் அடிப்படையிலான ஆதரவு தொடரும் என்று காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் அஜீத் ஜோகி வியாழக்கிழமை கூறினார்.

பீஹாரில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சோனியாகாந்தி சனிக்கிழமை நேரில் விஜயம் செய்தார்.

ராப்ரி அரசு ஆட்சியில் நீடிக்கும் தார்மிக உரிமையை இழந்துவிட்டது என்றால் அந்த அரசுக்குக் காங்கிரஸ் ஆதரவளிப்பது ஏன் என்ற கேள்வி எழுபபப்பட்டது.

ராஷ்ட்ரீய ஜனதா தளத்



துக்கு காங்கிரஸ் ஆதரவு தெரிவிக்கவில்லை என்று ஜோகி மறுத்தார். எனினும் செய்தியாளர்கள் மீண்டும் மீண்டும் இதே கேள்வியைக் கேட்டபோது மதவாத சக்திகள் ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதற்காக ராஷ்ட்ரீய ஜனதா தள அரசுக்கு பிரச்சினைகளின் அடிப்படையில் ஆ ரவளிப்பது என்று காங்கிரஸ் முடிவு செய்திருந்தது இப்போதும் அதே நிலை நீடிக்கிறது. முறையாக ஆதரவளிப்பதும், பிரச்சினைகளின் அடிப்படையில் ஆதரவளிப்பதும் வெவ்வேறானவை என்றார் ஜோகி.

(ஐ-10)

## டில்லி - லாகூர் பஸ்ஸில்

# பாகிஸ்தான் பிரதமர் வாஜ்பாயுடன் வருவார்

இஸ்லாமாபாத், பெப். 15

பாகிஸ்தானுக்கு பஸ்ஸில் செல்லும் பிரதமர் வாஜ்பாய் டில்லி திரும்பும்போது அவருடன் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் வரவுள்ளார்.

தகவலறிந்த வட்டாரங்கள் இதை இஸ்லாமாபாத்தில் வெள்ளிக்கிழமை தெரிவித்தன.

டில்லி–லாகூர் பஸ் போக்குவரத்து 20ஆம் திகதி தொடங்குகிறது. அந்த பஸ்ஸில் வாஜ்பாய் பாகிஸ்தான் செல்கிறார். நவாஸ் ஷெரீப்புடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் 22 ஆம் திகதி நாடு திரும்புகிறார். அவருடன் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் பஸ்ஸில் வரத் திட்டமிட்டுள்ளார்.

டில்லியில் இருந்து லாகூருக்கு இந்தியா பஸ் சேவை நடத்துவதுபோல் லாகூரில் இருந்து டில்லிக்குப் பாகிஸ்தான் பஸ்ஸை இயக்கும்.

(ஐ-10)

# தமிழக அரசைக் கலைக்க கோருகிறார் ஜெயலலிதா



சென்னை, பெப். 15

பீஹாரில் ராப்ரிதேவி அரசு கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி கொண்டு வரப்பட்டதை வரவேற்கிறேன் — என்று அ.தி.மு.க. செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது :—

பீஹாரில் தாழ்த்தப்பட்ட தலித் மக்களுக்குத் தொடர்ந்து இழைக்கப்படும் அநீதிகளைத் தடுக்க இயலாத அரசு கலைக்கப்பட்டது நியாயமான நடவடிக்கையாகும். ஆனால் தற்பொழுது பீஹாரை விட தமிழ் நாட்டில்த்தான் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. எனவே தி.மு.கவின் ஆட்சியும் கலைக்கப்படக் கூடியதே.

தமிழ்நாட்டில் மதத் தீவிரவாதிகள் வரம்பு மீறிச் செயற்படுகின்றனர். அவர்களைத் தடுத்து வைக்க முடியாது தமிழ்நாடு அரசு திண்டாடுகின்றது — என்று தெரிவித்துள்ளார்.

(க)

# ஆப்கானிஸ்தானைவிட்டு பின்லேடன் தப்பினார்?

காபூல், பெப். 15

சர்ச்சைக்குரிய சவுதி கோடீஸ்வரர் ஒஸாமா பின்லேடன் ஆப்கானிஸ்தானில் இருந்து காணாமற் போய்விட்டார் எனச் செய்திகள் வெளியாகி உள்ளன.

மேற்படி தகவலை தலிபான் தலைவர் முல்லா முகமது ஓமர் ஊர்ஜிதம் செய்துள்ளதுடன் லேடன் எங்கிருக்கிறார் என்பது தொடர்பாகத் தமக்கு எதுவும் தெரியாது என்றும் கூறியுள்ளார்.

அண்மைக்காலங்களில் லேடனின்நடமாட்டங்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்ததுடன் அவர் வெளி உலகத்தோடு கொண்டிருந்த தொடர்புகள் துண்டிக்கப்பட்டது எனவும் தலிபானின் மூத்த அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை —

ஒஸாமா பின்லேடன் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துமாயின் அது அமெரிக்காவின் சர்வாதிகாரப் போக்கைக் காட்டுவதாகவும் பாரிய குற்றமாகவும் இருக்குமென்று ஆப்கானிஸ்தானின் தலிபான் இயக்கம் கடந்த வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

பின்லேடன் மேற்கு நாட்டு இலக்குகள் மீது தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளார் எனக் கூறி வருகின்றமை அமெரிக்கா மற்றுமொரு தாக்குதல் நடத்துவதற்காகப் புனையப்பட்ட கட்டுக்கதை என்று தலிபான் இயக்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் கூறியுள்ளார்.

பின்லேடனுக்குரிய தொலைத் தொடர்புகளைத் துண்டித்தல், அவரது செயற்பாடுகளைக் கண்காணித்தல் போன்ற தடைகளை தலிபான் லேடன் மீது விதித்ததை அமெரிக்கா கடந்த புதன்கிழமை நிராகரித்தமை தொடர்பாக பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்க அதிகாரிகளும் மற்றும் தலிபான் இயக்கத்தினரும் கடந்த இரண்டு வாரங்களாக நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தே தலிபான் பின்லேடன் மீது சில தடைகளை விதித்தது.

(ஐ-க-10)

# வால்வெள்ளிகளின் துகள்களை சேகரிக்க புதிய விண்கலம் செல்லும்

கேப்கனவரல், பெப். 15

வால் நட்சத்திரங்களில் இருந்துவரும் துகள்கள் பற்றி ஆராய, 'ஸ்டார் டஸ்ட்' எனும் விண்வெளிக்கலம் ஒன்றினை 'நாஸா' விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் அனுப்பவுள்ளது. இது துகள்களைச் சேகரித்து மீண்டும் பூமிக்குத் திரும்பவுள்ளது.

மேற்படி முயற்சி வெற்றியளிக்கும் எனத் தெரிவித்தார் நாஸாவைச் சேர்ந்த அதிகாரியொருவர். 'வைல்ட்-2' என்ற வால் நட்சத்திரத்தின் துகள்களே ஆராயப்படவுள்ளன. மேற்படி வால் நட்சத்திரம், பூமியுடன்நேர்கோட்டில் வரும்போதே விண்வெளிக்கலம் ஏவப்படவுள்ளது. எனவே, அது ஏவப்படும் நோக்கில் ஏதாவது தாமதம் ஏற்பட்டாலும் அது [illegible] சேகரிக்கும் பணியில் ஈடுபடும் விண்கலத்துக்கு உதவமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி 'ஸ்டார் டஸ்ற்' எனும் விண்கலம் 2004 ஆம் ஆண்டளவில் 'வைல்ட்-2' எனும் ஈல்நட்சத்திரத்துடன் 178 மில்லியன்மைல்கள் பயணிக்கவுள்ளது. துகள்களைச் சேகரித்த பின் 2006 ஆம் ஆண்டளவில் மேற்படி விண்கலம் பூமிக்குத் திரும்பவுள்ளது.

(ஐ-10)

## உலக அரங்கில்

# மேற்கு ஆப்கனில் நில நடுக்கம்

## 60 பேர் பலி! 200 பேர் காயம்

காபூல், பெப். 15

மேற்கு ஆப்கானிஸ்தான், வடக்கு பாகிஸ்தான் பிரதேசத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 60 பேர் வரை உயிரிழந்துள்ளனர்; 200 பேர் வரை காயமடைந்துள்ளனர். இப்பகுதியில் உள்ள வீடுகள் அனைத்தும் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட இந் நில நடுக்கம் ரிச்டர் அளவில் 5.5 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இப் பிரதேசங்களில் மேலும் நிலநடுக்கம் ஏற்படலாம் என அஞ்சப்படுவதை அடுத்து மக்கள் தற்காலிகக் கூடாரங்களை அமைத்துத் தங்கி உள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண உதவிகளை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மேற்கொண்டுள்ளது.

(ஐ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

நவாலி வடக்கு, புலவர் வீதியைச் சேர்ந்த சுந்தையா நாகேசு (182010898V) திருமதி நாகேசு தங்கம்மா, தியாகராஜா, அருள்ராஜ் ஆகியோரின் தேசிய, விசேட அடையாள அட்டைகள் யாழ். நகரில் தொலைந்து விட்டன. கண்டெடுத்தவர்கள் க. நாகேசு, புலவர் வீதி, நாவலி வடக்கு, மானிப்பாய் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(63087)

எனது மூக்குக்கண்ணாடி பண்டத்தரிப்புக்கும் இளவாலைக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் அல்லது கிராமசேவையாளர்கள் சிவகுமார் அல்லது சுதர்சனிடம் ஒப்படைத்து உதவவும். (63102)

### மணமகள் தேவை

டென்மார்க்கில் நிரந்தர விசாவுடன் வேலை செய்பவருக்கு பெற்றோர் மணமகள் தேடுகின்றார்கள். வயது 29, சமயம் இந்து, செவ்வாய் 7, ஸ்பொன்சர் உண்டு. சகலரும் விண்ணப்பிக்கலாம். S.சிவலிங்கம் 67/1, குருசோ வீதி, யாழ்ப்பாணம்.

(63056)

29 வயது பாவம் குறைந்த 7 இல் செவ்வாய் உள்ள சிறப்புப் பட்டதாரி ஆசிரியருக்கு மணமகள் தேவை. மணமகள் A/L படித்தவராக இருத்தல் வேண்டும். அரசாங்கத் தொழில் புரிபவர்கள் விரும்பத்தக்கது. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 847, மே/பா உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(63095)

### யாழ்ப்பாணம்


300 நாடங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் நூல்கள் 1 யாழ்ப்பாணமா? கொழும்பா? நாம் வாழுகின்ற இவ்வாழ்வைச் சித்திரிக்கும் 7 நாடகங்களும், 4 கட்டுரைகளும். 2 யாழ்ப்பாணத்தில் அந்தஆறு மாதங்கள். (66284)

### பொருளியல்

''சர்வதேச வர்த்தகம்'', ''வர்த்தக மாற்று வீதம்'' ஆகிய நூல்கள் விற்பனையாகின்றன. ஆசிரியர்: வே. கருணாகரன். கிடைக்கும் இடங்கள் :- பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(62906)

# ஈராண்டு நினைவஞ்சலி



**நாகலிங்கம் கனகரட்ணம் (S.K)**

(முன்னாள் கணக்காளர், ப. நோ. கூ. ச: சங்கானை)

தாயின் மடியில் **02–11–1927**

சிவனின் திருவடியில் **08–03–1997**

உன்னைப் போல் ஒரு தெய்வமுண்டோ
நாம் கண்ட வாழ்விலே
ஆண்டு பல சென்றாலும்
உன் திருமுகம் எம் நெஞ்சை விட்டு அகலாது!

பிரிவால் வாடும்

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள், சகோதரன்.**

மில் லேன்,
பிரம்படி, கொக்குவில்.

(61312)

# யாழ். - பருத்தித்துறை புதிய பஸ் சேவை

## இன்று முதல் ஆரம்பம்

வடமராட்சி, பெப். 15

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு புதிய பஸ் சேவை (764 இலக்க பாதை) ஒன்று இன்று திங்கட்கிழமை முதல் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 7 மணிக்கு பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் பஸ் மந்திகை, துன்னாலை, கோயில் சந்தை, நெல்லியடி, கோப்பாய், உரும்பிராய். திருநெல்வேலி ஊடாக யாழ்ப்பாணம் வந்தடையும்.

இதே பஸ் மாலை 5 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் இருந்து மேற்படி பாதை வழியே பருத்தித்துறையைச் சென்றடையும்.

இப் புதிய சேவை மூலம் வடமராட்சிப் பகுதியில் இருந்து யாழ். பல்கலைக் கழகம் மற்றும் உயர் தொழில் நுட்பக்கல்லூரி, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றுக்கு வரும் மாணவர்களும் இதர அரச திணைக்கள ஊழியர்களும் நன்மை அடைவர்.

(க-173)

## கணனி மயம்

நவாலி, பெப். 15

யாழ். செயலக ஊழியர்களுக்கான சம்பளப் பட்டியல் முதல் தடவையாக கணனி மூலம் தயாரிக்கப்பட்டு கடந்த மாதச் சம்பளம் வழங்கப் பட்டுள்ளது. (ஐ-100)

# தோட்டங்களில் உருளைக்கிழங்கு திருட்டு

கோப்பாய், பெப். 15

கோப்பாய்ப் பகுதித் தோட்டங்களில் உருளைக்கிழங்கு திருடப்படும் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

கடந்த புதன் இரவு முத்துலிங்கம் என்பவரது தோட்டத்தில் உருளைக்கிழங்கு திருடப்பட்டது. இவருடைய தோட்டத்தில் விதை உருளைக்கிழங்கும் விதைக்கப்பட்ட காலப்பகுதியில் திருடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

உருளைக்கிழங்கு விலை வீழ்ச்சியாலும், காலநிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக அதிக விளைச்சலைப் பெற முடியாது போனதாலும் நட்டமடைந்துள்ள விவசாயிகளுக்கு இத்தகைய திருட்டுச்சம்பவங்கள் மேலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

(ஐ-72)

ஏழாலை வசந்தபுரம் களபாவோடை
அருள் விளங்கும்

## வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தான மண்டலாபிஷேக பூர்த்தியும் அம்மன் தாயாரின் அவதார தின விழாவும்

16 . 02 . 99 செவ்வாய்க்கிழமை

காலை 8. 00 மணிக்கு விநாயக வழிபாடு
10. 00 மணிக்கு 1008 சங்காபிஷேகம்
11. 00 மணிக்கு நடமாடும் தெய்வத்திற்குப் பாதபூசை
12. 00 மணிக்கு வேதபாராயணம்

(இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் தலைமையில் ஆசிரியர்களும், மாணவர்களும்)

**பிரதம குரு**
**பிரம்ம ஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள்**
(புன்னாலைக்கட்டுவன்)

**ஆசியுரை**

சிவத் திரு. வ. குமாரசுவாமி ஐயர்
பிரம்ம ஸ்ரீ கெங்காதரக் குருக்கள்
பிரம்ம ஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்

ஊனமுற்றவர்கள், ஏழைச் சிறார்கள், வயோதிபர்கள் ஆகியோருக்கு வழமைபோல அன்பளிப்புகள் வழங்கப்படும்.

**விசேட மேளக்கச்சேரிகள்**
வழங்குவோர்:

கோவிந்தசாமி புதல்வர்கள்
உதயநாதன் குழுவினர்
T. M. வாசகர் குழுவினர் (தேவஸ்தானக் குழுவினர்)
K. சிவகுமார் குழுவினர்
தனித்தவில்: K. நித்தியானந்தன்

பிற்பகல் 1. 00 மணிக்கு சுவாமி திருவீதி உலா நிகழ்வும் அன்னதானமும் இடம் பெறும்.

**ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்.**

**ஏழாலை களபாவோடை**
**அருள்மிகு வசந்தநாகபூஷணி அம்பிகை தேவஸ்தான அம்மன் தாயார் அவர்கட்கு உளங்கனிந்த ஜயந்திதின வாழ்த்து.**

வாழியவே பல்லாண்டு பாரினிலே
சூழுலகின் துயர்தீர்க்கும் தாயே!
உன்றன் கைத்தலத்து நீறும் வேப்பிலையும்
கடும்பிணியும் துயரும் நீக்கும் விந்தை அம்மா!
நாடும் பக்தர் நலம்பெறவைக்கும் நாயகியே!
காணும் அகவை முப்பத்தெட்டில்
நாகம் அணிசெய் நாயகியாம்
வசந்த நாகபூஷணியின் இன்னருளால்
வேண்டும் பணிகள் விருப்புடன் நிறைவேற
பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து எமைக்காக்க
உளங்கனிந்த பக்தியுடன் வாழ்த்துகின்றேன்
வாழ்க வாழ்க பல்லாண்டு பல்லாண்டு.

சைவத்தமிழ் இசைவாருதி
**சிவத்திரு. வ. குமாரசாமி ஐயர்**

[C/6490]





NIPPON EL - 2u MODEL
5 W = 25 W
7 W = 35 W
9 W = 40 W
11 W = 60 W
13 W = 75 W
15 W = 80 W

NIPPON EL - 3u MODEL
15 W = 80 W
18 W = 85 W
20 W = 100 W
24 W = 120 W

NIPPON ESL MODEL
9 W = 40 W
11 W = 60 W
13 W = 60 W
18 W = 85 W

நிப்போன் தயாரிப்புகள்
உங்களுடைய பணத்தினை பெறுமதியாக்குங்கள்
குறைந்த விலைகளில், கூடிய வகைகளில்
நிப்போன்
மின் சக்தியை சேமிக்கும் பல்ப்புகள்
COMPACT SIZE
மின்சக்தியின் அடிப்படையில் பணத்தினை சேமியுங்கள் அத்துடன் விலையின் அடிப்படையில் அது சிறந்தது
12 மாதங்கள் உத்தரவாதமுடையது 12 மாதங்களுக்கிடையில் பல்ப்புகளை இலவசமாக பழுதுபார்க்கப்படும்
NIPPON ENERGY SAVING BULBS ARE NOW REPAIRABLE
24 Hours a day will cost you only =/86 cts, SAVE 80%
SPECIAL DISCOUNTS FOR PURCHASES OF 50 BULBS OR MORE
LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 320961, 335301, 437735, 324726
10, Trelawny Place, (Behind Milk Bar)
Bambalapitiya Junction, Colombo 4. Tel.: 589993
AVAILABLE ISLANDWIDE
Insist on "NIPPON" Guarantee Card
"NIPPON" The Guaranteed Product
NIPPON ENERGY SAVER NIPPON ENERGY SAVER NIPPON ENERGY SAVER
(இ-6491)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு

## வடக்கு-கிழக்கு மாகாண பொதுசேவைக்குஇலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் II 'ஆ' வகுப்பிற்கு ஆள் சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 1999

1 வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையின் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள இலங்கை தொழில் நுட்பவியல் சேவையின் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் வகுப்பு II 'ஆ' பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 05 - 03 - 1999 ஆகும்.

2. இப்பதவிக்குரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை 41 ஆகும். இவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை மேற்கூறப்பட்டவாறு இருந்த போதிலும் சேவையின் தேவையைப் பொறுத்து வெற்றிடங்களின் எண்ணிக்கைகுறைவதற்கோ அல்லது கூடுவதற்கோ இடமுண்டு. எவ்வாறாயினும் நிரப்பப்படும் வெற்றிட எண்ணிக்கை தொடர்பான இறுதித்தீர்மானம் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

3. சம்பள அளவுத்திட்டம்: ரூபா 51, 840- 7X1,320- 10X1,560- 76,680 -(T-3-1-1)

4. தகைமைகள்:

4. 1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

4. 2. சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

4. 3. விண்ணப்ப முடிவு திகதி அன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில்/ மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையது அல்ல)

4. 4. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளாவது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும்.

பின்வரும் ஆவணங்கள் மூலம் நேர்முகப்பரீட்சையின் போது இவற்றை நிரூபித்தல் வேண்டும்.
1) வாக்காளர் இடாப்பின் பிரதி அல்லது
2) வதிவு தொடர்பான கிராமசேவை உத்தியோகத்தரிடம் பெற்ற சான்றிதழ்

4.5 தொழில் நுட்பவியல் சார் தகைமைகள்:-
கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுள் ஒன்றையாவது விண்ணப்பதாரி கொண்டிருத்தல வேண்டும்.

4. 5.1 குண்டசாலை, அங்குணகொலபொலச, பெல்வெகாற, வவுனியா கரப்பிஞ்ச, லபுதுவ, அனுராதபுர, விபிலெ, வாரியபொல ஆகிய விவசாய கல்லூரி ஒன்றினால் வழங்கப்பட்ட இருவருட டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

4. 5.2 சீப்புச்குளம் விலங்கு வேளாண்மைப் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் இருவருட டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

4. 5. 3. வெலிகறையிலுள்ள இலங்கை விலங்கு வேளாண்மைக் கல்லூரியினால் வழங்கப்படும் இருவருட டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

4,5.4. மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைக்கு சமமானது அல்லது உயர்வானது என வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைச்குழுவினால் அங்கீகரிக்கபபடும்ஏனையஒருதகைமையை பெற்றிருத்தல்.

4. 5 5. உயர்கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் விவசாய டிப்ளோமா சான்றிதழ்

5 ஆள்சேர்ப்பு முறை:-

எழுத்துப் போட்டிப் பரீட்சை பெறுபேற்றின் திறமை அடிப்படையிலும் அரசாங்க தாபனக்கோவை விதிகள், அங்கீகரிக்கப்பட்ட ஆள்சேர்ப்புத்திட்டம், அரச சுற்று நிருபங்கள் ஆகியவற்றிற்கு இணங்க ஆள்சேர்ப்புச் செய்யப்படுவர்.

06 எழுத்துப்பரீட்சை:-

இவ் எழுத்துப்பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடத்தப்படும், எழுத்துப்பரீட்சை கீழ் குறிப்பிடப்பட்டவாறு இரு பகுதிகளைக் கொண்ட ஒரு வினாப்பத்திரத்தையுடையதாக இருக்கும்.

1 ஆம் பகுதி;- விவேகப்பரீட்சை-நேரம் 1 மணித்தியாலம் (100 புள்ளிகள் அபேட்சகரது தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் அவரது கருத்துக்களின் பகுப்பாய்வு நிலைமைகள், தீர்மானிக்கும் சக்தி என்பனவற்றைப் பரீட்சிக்கும் வினாக்களைக் கொண்டதாக இருக்கும்.

2 ஆம் பகுதி:- பொது வினாப்பத்திரம் - நேரம் 1 மணித்தியாலம் (100 புள்ளிகள்) அபேட்சகர் வசிக்கின்ற அத்துடன் சேவை புரிகின்ற சூழல் உட்பட இலங்கையின் அரசியல், சமூக, கலாசார மற்றும் பொருளாதார சூழ்நிலை, தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள். அதேபோன்று விஞ்ஞான முறையிலான விலங்கு வேளாண்மை அபிவிருத்தி என்பன தொடர்பில் அபேட்சகரது அறிவைப் பரீட்சிப்பதற்கான பொது வினாக்களைக் கொண்டதாக இருக்கும்.

நேர்முகப்பரீட்சையில் தகைமைகள் பரிசீலிக்கப்படும். இதன்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

07 பரீட்சைக்கட்டணம்:-

விண்ணப்பதாரி வதியும் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் மட்டும் செலுத்திய ரூபா 200 இற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் கழராதவாறு ஒட்டி இணைத்து அனுப்புதல் வேண்டும். இப்பணம் வடக்கு—கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் 6004 இலக்க வைப்புக்கணக்கின் வரவில் சேரக்கூடியதாக பிரதேச செயலகத்தினால் கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக் கட்டணங்கள் மீளத்திருப்பிச் செலுத்தப்படமாட்டாது என்பதனையும் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

08. விண்ணப்பிக்கும் முறை:-

இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி ஏ4 அளவிலான (21 செ. மீ X 29 செ. மீ) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பத்தை ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும். அதில் இலக்கம் 01 தொடக்கம் 10 வரையுள்ள பகுதியை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாதிரி விண்ணப்பப் படிவம்

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவைக்கு
இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின்
கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் II 'ஆ' வகுப்புக்கு
ஆள் சேர்ப்பு செய்வதற்கான

## போட்டிப் பரீட்சை - 1999

சுட்டெண்:-
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

01. விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களுடன் பெயர்.
வண./ திரு / திருமதி/ செல்வி:
தமிழில்/ சிங்களத்தில்;
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):

02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:
தமிழில்/ சிங்களத்தில்:
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):

03. தற்போதைய நிரந்தர முகவரி:
தமிழில்/ சிங்களத்தில்:
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்)

04. பால்; ஆண் M/ பெண் F

05. பரீட்சைக்குத் தோற்றும் மொழி:
தமிழ் T/ சிங்களம் S/ ஆங்கிலம் E.

06. தெரிவு செய்யும் பரீட்சை நகர எண்: (09 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சைநகர இலக்கத்தைக் குறிப்பிடவும்.)

07. இனம்: சிங்களவர் - 1, இலங்கைத்தமிழர் - 2, முஸ்லிம் - 3, இந்தியத் தமிழர் - 4, ஏனையவை - 5

08. நீங்கள் இலங்கைப் பிரசையா?,
வம்சாவளியினாலா அல்லது பதிவு செய்யப்பட்டதனாலா என்பதனைக் குறிப்பிடுக.

09. விவாகமானவரா/ விவாகமாகாதவரா?

10. பிறந்த திகதி; வருடம்: மாதம்: திகதி:
1999-03-05 ஆம் திகதியன்று
வயது: வருடங்கள் மாதங்கள்: நாட்கள்:

11.
1. நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:
2. பிரதேச செயலாளர் பிரிவு:
3 கிராம உத்தியோகத்தர் பிரிவு:
4. வதியும் கால எல்லை: தொடக்கம்: வரை:

12 தொழில்நுட்ப தகைமைகள்:
1. பெற்றுள்ள டிப்ளோமாச் சான்றிதழின் பெயர்:
2. அச்சான்றிதழை வழங்கிய நிறுவனத்தின் பெயர்:
3. டிப்ளோமா சான்றிதழ் நடைமுறைக்கு வரும் திகதி:

13. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

14. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட.............................பிரதேச செயலகத்தின்............................ஆம் இலக்க..............ஆம் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் இப்பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடக்கவும் இந்தப் பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வதற்கும் இணக்கத்தைத் தெரிவிக்கின்றேன்.

திகதி:

..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

15. விண்ணப்பப் பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, பதவி தாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 74,160 ற்கு மேற்பட்ட ஆண்டு சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

16 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:
இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற வண/திரு/திருமதி/செல்வி...........................என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும்...................ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்கின்றேன்.

..............................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்

திகதி:
கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர்:
பதவி: முகவரி: (பதவி முத்திரை)

17. திணைக்களத் தலைவரின் உறுதியுரை:
இத்திணைக்களத்தில் தற்காலிக / நிரந்தர உத்தியோகத்தராக கடமையாற்றும் வண/திரு/திருமதி/செல்வி...............................அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படுமிடத்து விடுவிக்க முடியும். அவரால் இங்கு குறிப்பிட்ட விடயங்கள் சரியானவை ஆகும்.
திகதி:

..............................
திணைக்களத் தலைவரின்
கையொப்பமும் பெயரும்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

[சி/6479]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு

வடக்கு - கிழக்கு மாகாண பொது சேவைக்கு இலங்கை தொழில்நுட்பவியல்
சேவையின் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் 11 'ஆ' வகுப்பிற்கு

## ஆள்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 1999

(ஐந்தாம் பக்கத் தொடர்)

அதன் முதற்பக்கத்திலும் எஞ்சிய பகுதியை இரண்டாம் பக்கத்திலும் அடங்கும் வண்ணம் ஒழுங்கு செய்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை 1999 – 03 – 05ஆந் திகதிக்கு முன் ''செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வடக்கு — கிழக்கு மாகாணம், இல: 35 மக்கேய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பிவைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் ll ஆ வகுப்பிற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை — 1999'' என பரீட்சையின் பெயரை குறிப்பிடுதல்வேண்டும். (அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை திணைக்களத்தலைவரினூடாக அனுப்புதல்வேண்டும்.) பூரணமற்றதும். உரிய தகைமைகளை கொண்டிராததும் குறித்த திகதிக்கு முன் கிடைக்கப்பெறாததுமான விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரி ஒருவர் தகுதியற்றவரென கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது நிரந்தர நியமனத்தைப் பெற்ற பின்போ எக்கட்டத்திலும் அவரின் நியமனம் இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரி ஒருவர் அளித்த விவரங்கள், சான்றிதழ்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் அல்லது அவர் ஏதேனும் முக்கிய விடயத்தை வேண்டுமென்று மறைத்திருந்தால் அவர் தெரிவிலிருந்து அல்லது சேவையில் இருந்து நீக்கப்படலாம்.

09. பரீட்சை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்கள் பின்வருமாறு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | — 1 | கிளிநொச்சி | — 4 | மட்டக்களப்பு | — 7 |
| மன்னார் | — 2 | முல்லைத்தீவு | — 5 | அம்பாறை | — 8 |
| வவுனியா | — 3 | திருகோணமலை | — 6 | கல்முனை | — 9 |

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையினைப் பொறுத்து விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகரம் அண்மையான நகரத்திற்கு மாற்றப்படலாம்.

இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத / குறிப்பிடப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பாகவும் தரப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தெரிவு நியமனங்கள் தொடர்பாகவும் வடக்கு — கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதியனாதும் முடிவானதுமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

**க. பரமேஸ்வரன்**
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு - கிழக்கு மாகாணம்
திருகோணமலை.

---

# யாழ்ப்பாண மாநகரசபை

## உழவு இயந்திர இழுவைப் - பெட்டிகள்

வாடகைக்கு அமர்த்துவதற்காக

## கூறுவிலை

மேற்படி சேவைக்கான கூறுவிலைகள் எம்மால் கோரப்படுகின்றன. இந்த சேவையை வழங்கக் கூடியவர்கள் ஒரு நாளுக்கான வாடகைத் தொகையை இட்டு 18 - 2 - 99 ஆம் திகதி 2 மணிக்கு பிந்தாமல் எமக்கு அனுப்பிவைக்கவும்.

பெட்டிகள் நல்ல நிலையில் உள்ளதாகவும், தன்னியக்க முறையில் பொருள்கள் பறிக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும். மேலதிக விவரங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
13-02-99 (சி/6497)

---

## சாரணர் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 15

சாரணத் தலைவர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை யாழ் மத்திய கல்லூரியில் யாழ் மாவட்ட சாரண ஆணையாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

குருளைச் சாரணத் தலைவர்களுக்கான கூட்டம் நண்பகல் 12-30 மணிக்கும், சாரணத் தலைவர்களுக்கான கூட்டம் பிற்பகல் 1-30 மணிக்கும் நடைபெறும் எனவும் சாரணத் தலைவர்களை தவறாது சமுகமளிக்குமாறும் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். [க]

## கடனைச் செலுத்த விசேட சலுகை

1993 ஆம் ஆண்டுக்குப் பிறகு வழங்கிய, 10 ஆயிரம் ரூபா உச்ச வரம்புடைய கடன்களை, மீளச் செலுத்த முடியாமல் உள்ளவர்களுக்கு விசேட சலுகை ஒன்றை இலங்கை வங்கி அறிவித்துள்ளது.

இக் காலங் கடந்த கடன்களை எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் முழுவதுமாகச் செலுத்தினால் 100 வீத வட்டி விலக்களிக்கப்படும் — வட்டி அறவிடப்படமாட்டாது.

அதேபோன்று எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் செலுத்துபவர்களுக்கு வட்டியில் 50 வீதம் விலக்களிக்கப்படும் என இலங்கைவங்கி யாழ். பிரதேச முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஐ-15)

## உ. கிழங்கு விலை மேலும் குறைகிறது

அரியாலை, பெப் 15

யாழ்ப்பாணத்தில் உள்ளூர் உருளைக்கிழங்கின் விலை வீழ்ச்சி அடைகிறது.

விவசாயிகள் முன்கூட்டியே அறுவடை செய்வதாலேயே உருளைக்கிழங்கின் விலையில் பெரிதும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இம்மாத முற்பகுதியில் உள்ளூர் உருளைக்கிழங்கு கிலோ 60 ரூபா முதல் 70 ரூபாவாக விற்கப்பட்டது.

தற்போது அது திருநெல்வேலிச் சந்தையில் கிலோ முப்பது ரூபாவாகக் குறைந்துள்ளது. இதேவேளை மருதனார்மடம் சந்தையில் கிலோ 50 ரூபாவாக விற்கப்பட்டது.

விவசாயிகள் அறுவடை காலத்திற்கு முன்னரே உருளைக்கிழங்கை அறுவடை செய்து விற்பதால் உருளைக் கிழங்கின் விலை குறைந்து காணப்படுகின்றது. (ஐ-17)

---

# உடன் விற்பனைக்கு

நஷனல் குளிர் சாதனப்பெட்டி (REFRIGERATOR), சலவை இயந்திரம் (WASHING MACHINE), அரிசி சமையல் பாத்திரம் (RICE COOKER) மின் கெற்றில், (ELECTRIC KETTLE), கிரேடா மின் சமையல் அடுப்பு, (ELECTRIC COOKER / GRILL / OVEN), மற்றும் சில சமையல் உபகரணங்கள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
334 (130), பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(பிற்பகல் 3.00 — 6.30 மணிக்கும் இடையில்)
(63114)

---

உ
சிவமயம்

# சபிண்டீகரண அழைப்பு

அன்புடையீர்!

1999-02-06 வெள்ளிக்கிழமை சிவபதப்பேறடைந்த எமது குடும்பத்தலைவர்

சிவஸ்ரீ

## சோ. விஜயரத்தினக் குருக்கள்

அவர்களின் சபிண்டீகரண ஆத்மசாந்திக் கிரியைகளும், மகேஸ்வர பூசையும் நிகழும் வெகுதானிய வருடம் மாசி மாதம் 5 ஆம் திகதி (**17-02-1999**) புதன்கிழமை நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் சமுகமளித்து மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தங்கள் நல்வரவை நாடும்
**தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள்.**

'' கீதா கோட்டம் ''
புற்றளைப்பிள்ளையார் கோயிலடி,
புலோலி தெற்கு,
புலோலி. (63063)

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி தர்மலிங்கம் கனகேஸ்வரி

தோற்றம்
03 — 04 — 1939

மறைவு
16 — 02 — 1996

அன்புச் சுடரே குடும்பத்தின் ஒளிவிளக்கே!
அன்பாய் வளர்த்து விட்டு வெகு விரைவினில் சென்றதேனம்மா
ஆண்டுகள் மூன்று சென்றாலும் உங்கள் அன்பு முகம் மாறுமோ?

உங்கள் நினைவில் வாடும்:
- குடும்பத்தினர்

' ன்பில்'
20/1, பாரதி வீதி,
கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம். (63110)

---

# கண்ணீர் அஞ்சலி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும்,
கொக்குவில் பிரம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட

## இரத்தினம் தனபாலசிங்கம் (S. M.)

(உரிமையாளர் N. R. TRANSPORT)

எமது நீண்டகால குடும்ப நண்பராகவும், எமது குடும்பத்தில் ஒருவராகவும் விளங்கிய திரு. நா. ரத்தினம் அவர்களின் சிரேஷ்ட புத்திரன் இரத்தினம் தனபாலசிங்கம் அவர்கள் 11 - 02 - 1999ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர் தம் துணைவியாருக்கும், பெற்றோருக்கும், சகோதரர்களுக்கும் மற்றும் குடும்பத்தில் உள்ள உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**க. குழந்தைவேலு குடும்பத்தினர்,**
வேலணை வடக்கு,
வேலணை.

**கு. சரவணநாதன் குடும்பத்தினர்.**
47, அரசடி வீதி,
தட்டாதெருச்சந்தி,
யாழ்ப்பாணம்.

40, Perakumba Plece,
Wellawatta, Colombo-6. ]63115]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கண் காணிப்பு அவசியம்

நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வரை காத்திருக்காமல், அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் வந்திருந்த இலங்கைக்கான ஜேர்மனியின் பிரதித்தூதுவர் கலாநிதி ஹான் ஸ்டிவோன் பொத்மர் தெரிவித்திருக்கிறார்.

பிரதித் தூதுவரின் கருத்து பொதுவாக, மேலோட்டமாக, மேலெழுந்த வாரியாக நோக்கப்படும் போது உகந்ததாகவே தோன்றும். ஆனால் போர் நடைபெறும் வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு இது முழு அளவில் பொருத்தமானதா, நடைமுறைச் சாத்தியமானதா என்பது கேள்விக்குரியதே.

மக்களின் வாழ்க்கை நிலை உயரவேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமில்லை. குறிப்பாக வடக்கு—கிழக்கு வாழ் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையோ நாட்டின் ஏனைய பகுதி மக்களினதை விட மிகமிகப் பின்தள்ளப்பட்டுள்ளது.

ஆகையால் அவர்களது வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கான சகல நடவடிக்கைகளும், பணிகளும் மிக அவசரமாகவும் அவசியமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த வகையில் தமிழ்ப் பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகள் இன்றியமையாதவை.

ஆனால் போரை நிறுத்தாமல், அதற்குக் காரணமான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல்—அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படாமல்—காலத்தை நகர்த்துவது அர்த்தமற்றது.

எந்தப் பக்கத்தால் நோக்கினும் போரும் இனப்பிரச்சினையும் பிணைந்து கிடக்கின்றன. அவற்றை அசட்டை செய்துகொண்டு பெரிய அபிவிருத்திப் பணிகள்மூலம் வடக்கு—கிழக்கு வாழ் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவது என்பது எதிர்பார்க்கும் உரிய பயனைத் தருமா என்பது சந்தேகமே.

மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை அல்லது வசதிக் குறைவுகளை நீக்குவதற்கான அபிவிருத்திப் பணிகளை, அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அபிவிருத்தி வேலைகளை இப்போது முன்னெடுக்கலாம்.

பெரும் அபிவிருத்தித் திட்டங்களைத் தொடங்குவதற்கு முன்னர் போருக்கு முடிவு கண்டு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதே உகந்த மார்க்கம்.

ஆகையால், நன்னோக்கத்துடன், வடக்கு—கிழக்கு மக்களுக்கு உதவிடும் பண்புடன், அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முன்வந்துள்ள வெளிநாடுகள், போரை நிறுத்தி, இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு காணுமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இல்லையேல், வடக்கு—கிழக்கிலும் கூட பெரும் அபிவிருத்திப்பணிகள் நடைபெறுவதாகப்பிரசாரம் செய்து கொண்டு போரினால் மக்களுக்கு உண்டாகும் தாக்கங்களை அரசு மூடி மறைக்கும்; போரையும் தொடரும். இது விடயத்தில்வெளிநாடுகள் கண்காணிப்புடனும், விழிப்புடனும் செயற்படுவது நல்லது.

# தேர்தல் கடமைகளில் ஈடுபட அரச ஊழியர்கள் பின்னடிப்பு

## ஜனவரியில் கிடைத்த அனுபவம் காரணமாம்

கொழும்பு, பெப். 15

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள மேல் மாகாணம், சப்பிரகமுவ மாகாணம், ஊவா மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் வடமத்திய மாகாணத்திற்கான மாகாணசபைத் தேர்தல்களில் பணியாற்றுவதற்கான ஊழியர்களைத் தேடுவது பெரும் பிரச்சினையாக உருவாகியுள்ளது எனத் தேர்தல் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடமேல் மாகாண சபைக்கு கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்குகள் எண்ணப்பட்ட மையங்களிலும் பணியாற்றிய ஊழியர்கள் மீது விடுக்கப்பட்ட அழுத்தங்கள் மற்றும் எச்சரிக்கைகள் காரணமாக அதிகமான அரசாங்க ஊழியர்கள் இனிமேல் தேர்தல் கடமைகளில் பங்குபற்றுவதில்லை எனத் தீர்மானித்துள்ளதால் இந்த நிலை உருவாகியுள்ளதாகத் தேர்தல் திணைக்களம் தெரிவிக்கிறது.

நடைபெறவுள்ள 5 மாகாண சபைகளுக்குமான தேர்தல்களின் போது 5 ஆயிரத்து 942 வாக்களிப்பு நிலையங்களில் பணியாற்றகுறைந்தது ஒரு இலட்சம் ஊழியர்கள் தேவைப்படுகின்றனர்.

இதற்கிடையில் வடமேல் மாகாண சபைக்கான தேர்தலின் போது தேர்தல் கடமையில் ஈடுபட்ட உதவித் தேர்தல் ஆணையாளர்கள் தம் மீது விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள், அழுத்தங்கள் பற்றி தேர்தல் ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

இதைவிட தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்குகள் எண்ணப்பட்ட மையங்களிலும் பணியாற்றிய பல அரச உத்தியோகத்தர்கள் தமக்கு ஏற்பட்ட துர் அனுபவங்கள் குறித்து வடமேல் மாகாணத்திற்குப் பொறுப்பான உதவித் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

(ஐ-10)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

குருநகர், பெப். 15

யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பி. ப. 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெற உள்ளது.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் சோ. பத்மநாதன் பிரதம விருந்தினராகவும், எல். கெங்காதரன் சிறப்பு விருந்தினராகவும், யாழ். வலயக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) த. அருணகிரிராசா விசேட விருந்தினராகவும், புனித அடைக்கல அன்னை ஆலய பங்குத் தந்தை அருள்திரு. ஞா.வி. பிலேந்திரன் அடிகள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ள உள்ளார்கள்.

(ஐ-51)

★ ★ ★

நாவற்குழி, பெப். 15

கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பி. ப. 1. 30 மணிக்கு அதிபர் செ. பேரின்பநாதன் தலைமையில் நடைபெற உள்ளன.

இப் போட்டிகளுக்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மு. வ. செல்வராசா பிரதம விருந்தினராகவும்— உதவிக் கல்விப் பணிப்பாளர் நா. சத்தியநாதன், உதவிக் கல்விப் பணிப்பாளர் க. குமாரசாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ-102)

## நோயாளி மரணம்

யாழ்ப்பாணம், பெப். 15

வயிற்றில் நீண்ட காலமாக இருந்து வந்த நோயைக் குணப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட வைத்திய முறை நோயாளியின் உயிருக்கு உலை வைத்துள்ளது.

கொழும்புத்துறையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சைமன் வீதியைச் சேர்ந்த கதிரவேலு நடராசா (வயது 48) என்பவரே உயிரிழந்தவராவார்.

மருத்தீடு எனத் தெரிவித்து தமிழ் வைத்திய முறையில் அதனை வயிற்றில் இருந்து அப்புறப்படுத்தவென மேற்கொள்ளப்பட்ட வைத்திய நடவடிக்கையின் போதே நோயாளி வைத்தியரின் வீட்டிலேயே மரணமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவரது சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

அதிக அளவிலான மருந்துப் பிரயோகம் என சடலத்தைப்பொறுப்பேற்ற டாக்டரினால் வைத்தியசாலைப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சடலம் பிரேத பரிசோதனையின் நிமித்தம் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-15)

## பாடசாலை பஸ்சேவையை விஸ்தரிக்கக் கோரிக்கை

வடமராட்சி, பெப். 15

மந்திகை, வராத்துப்பளை ஊடாக பருத்தித்துறைக்கு பாடசாலை பஸ்சேவையினை ஆரம்பிக்குமாறு வடபிராந்திய போக்கு வரத்துச்சபை பருத்தித்துறை டிப்போ அத்தியட்சகரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபை சனசமூகநிலையங்களின் சமாசத்தலைவர் எ. என். எஸ். திருச்செல்வம் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

கரவெட்டி அந்தனன் திடலிலிருந்து யார்க்கரை, துன்னாலை மந்திகை ஊடாக பருத்தித்துறையில் நடத்தப்பட்டுவரும் பாடசாலை சேவையை மந்திகையிலிருந்து உபயகதிர்காமம், வராத்துப்பளை, கற்கோவளம், தும்பளை ஊடாக விஸ்தரித்து நடத்துமாறு இக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விஸ்தரிப்பினால் குறித்த பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் நன்மை அடைவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-173)

### நாளை

மாசி 04

செவ்வாய்க்கிழமை

திதி: அமாவாசை
பிற்பகல் 12. 58 வரை

நட்சத்திரம்: அவிட்டம்
மாலை 6.54 வரை.

சுபநேரம்: 11.03- 12.33
ராகுகாலம்: 3.33- 5.03

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

மொழி அறிவியல் என்பதுதத்துவத்துறை பெற்றெடுத்த மகள் போன்றதாகும்.

- நீட்சே

## விளையாட்டு கழகம் அமைப்பு

நவாலியில் புதிய விளையாட்டுக் கழகம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர் வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நவாலி தெற்கு அ.மி.த.க. பாடசாலையில் காலை 9 மணிக்கு இப் புதிய விளையாட்டுக் கழகம் ஆரம்பித்து வைக்கப்படும்.

இதில் நவாலி வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்குப் பிரிவுகளையும் சேர்ந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளையும், விளையாட்டு ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளது.

(ஐ-185)

## நல்லூர் பிரதேசத்தில் ச. ச. நிலையங்களுக்கும் பாடசாலைக்கும் நூல்கள்

வலி. வடக்கு பெப். 15

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சனசமூக நிலையங்கள் மற்றும் பாடசாலைகள் என்பவற்றுக்கு வழங்கவென இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சினால் ஒரு தொகுதி நூல்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேற்படி நூல்களை இந்து சமய கலாசார அமைச்சின் கொழும்பு தலைமையகத்தில் வந்து பெறும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நூல்களை கொழும்பில் இருந்து எடுத்து வந்து விநியோகிக்க நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி மைதிலி விசாகருபன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந் நூல்கள் கலாஜோதி இளைஞர் ஒன்றியம், அரியாலை சனசமூக நிலையம், அரியாலை காந்தி சனசமூக நிலையம், திருநெல்வேலி மகாத்மா சனசமூக நிலையம், கச்சேரி கிழக்கு சனசமூக நிலையம், அரியாலை கலைமகள் சனசமூக நிலையம், நல்லூர் வடக்கு சனசமூக நிலையம், கோண்டாவில் ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையம் என்பவற்றிற்கும்—

யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம், கனகரத்தினம் மகாவித்தியாலயம். பெரியபுலம் மகாவித்தியாலயம், யாழ். இந்து மகளிர் கல்லூரி, செங்குந்த இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கும் வழங்கப்படவுள்ளன.

(ஐ-86)

## அந்தோனியார் கல்லூரி திறக்கப்பட்டது

காரைநகர், பெப். 15

ஊர்காவற்றுறை, புனிதஅந்தோனியார் கல்லூரி நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் கடந்த புதனன்று திறந்து வைக்கப்பட்டது.

முற்று முழுதாகச் சேதமடைந்திருந்த கட்டடத் தொகுதியினை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் சுமார் 65 இலட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்திருந்தது.

ஜேர்மன் நாட்டு இலங்கைக்கான பிரதித் தூதுவர் எச். ஈ. வொன் போத்மர் நாடாவை வெட்டி கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தார். அதிபர் க. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப; விக்கினேஸ்வரன், கல்வித் திணைக்கள பிரதம பொறியியலாளர் ஜி. சிவபாலன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-ரீ)

## மரமுந்திரிகை கன்று விநியோகம்

உரும்பிராய், பெப். 15

மரமுந்திரிகைக் கன்றுகள் தேவைப்படுவோர் தத்தமது விவசாய சம்மேளனங்களினூடாகத் தொடர்பு கொள்ளும்படி மர முந்திரிகைக் கூட்டுத்தாபனம் கோரியுள்ளது. இக்கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடா நாட்டின் பல பகுதிகளில் இப் பயிர்ச் செய்கைக்கு ஏற்ற மண்வளம் இருப்பது தெரியவந்துள்ளதைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் மரமுந்திரிகைச் செய்கையை ஊக்குவிக்க மேற்படி கூட்டுத்தாபனம் முன்வந்துள்ளது.

(ஐ-154)

## கால்நடைகளை கட்டி வளர்க்கக் கோரிக்கை

நாவற்குழி, பெப். 15

தனங்கிளப்பு, மறவன் புலோப் பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் சிறுதானிய செய்கையில் ஈடுபட்டு உள்ளார்கள். இச்சிறுதானியப் பயிர்கள் தற்போது முளைத்து நல்ல நிலையில் உள்ளன. இச்சிறுதானியத்தை அறுவடை செய்ய முன் கட்டாக்காலி கால்நடைகளினால் அழிவு ஏற்படுமோ என விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

ஆகவே கால்நடை வளர்ப்போர் கால்நடைகளைக்கட்டி வளர்க்குமாறும் இதுவரை சிறுதானியத்தை விதைக்காத விவசாயிகள் விதைக்குமாறும் இப்பகுதி விவசாய சம்மேளனமும், இப்பகுதி பிரசைகள் குழுவும் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

[ஐ—102]

## கூ. சங்கக் கிளைகளில் அரிசி இல்லை

சாவகச்சேரி, பெப். 15

தென்மராட்சி — சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையங்களில் அரிசி இல்லை என கடந்த மூன்று வார காலமாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். பொதுமக்கள் கூடிய விலை கொடுத்தே தனியார் விற்பனை நிலையங்களில் அரிசியைப் பெற்று வருகின்றனர். தனியார் விற்பனை நிலையங்களில் அரிசி — 37 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

[ஐ—31]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திச் சாரம்

### 'பிக்கப்' வாகனம் பெறப்படும்

அரியாலை, பெப். 15

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு கப்பல் மூலம். 'பிக்கப்' வாகனம் ஒன்று தருவிக்கப்படவுள்ளது.

தற்போது உதவி ஆணையாளர் அலுவலகப் பாவிப்புக்கென ஒட்டோ வாகனம் ஒன்றே ஈடுபட்டு வருகின்றது.

(ஐ-17)

### கிணறு புனரமைப்பு

அரியாலை, பெப். 15

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்திற்கு முன்னால் இருக்கும் குடிதண்ணீர்க் கிணறு புனரமைக்கப்பட்டு வருகின்றது.

புனரமைப்பு வேலைகள் முடிவுற்றதும் இக் கிணறு பொதுமக்களின் பாவனைக்கு விடப்படும் என்று ஆலயப் பரிபாலன சபையின் தலைவர் க, செந்தில் குமரன் தெரிவித்தார்.

(ஐ-17)

### பாடசாலைகளுக்கு புதிய அதிபர்கள்

தென்மராட்சி, பெப். 15

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஐந்து பாடசாலைகளுக்குப் புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், மந்துவில் அ த.க, பாடசாலை, சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலயம், மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-117)

### பொங்கல் பாடல் ஒலிப்பதிவு நாடா

அரியாலை, பெப். 15

யாழ். திருமறைக் கலாமன்றம் பொங்கல் பாடல் ஒலிப்பதிவு நாடாவை அடுத்த மாதம் வெளியிட்டு வைக்கவுள்ளது.

மன்றத்தின் பிரதம இசையமைப்பாளர் இசைத் தென்றல் ம. யேசுதாசனால் தயாரிக்கப்பட்ட கிராமிய இசையில் அமைந்த பொங்கல் பாடல்கள் இந்த ஒலிப்பதிவு நாடாவில் உள்ளன.

(ஐ-17)

### அதிபர் நியமனம்

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்துக்கு புதிய அதிபராக க. ஞானலிங்கம் இன்று தொடக்கம் கடமையேற்க உள்ளார். இவர் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய அதிபராக கடந்த 10 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வந்தார்.

(ஐ - 102)

### பிரதித்தூதர் விஜயம்

அரியாலை, பெப், 15

யாழ்ப்பாணம் வந்திருந்த இலங்கைக்கான ஜேர்மன் பிரதித் தூதுவர் கலாநிதி ஹான்ஸ் டிவோன் பொத்மர் யாழ், திருமறைக் கலாமன்றத்திற்கு விஜயம் செய்து அங்கு இடம் பெற்ற சிறுவர்களின் கலை நிகழ்வுகளைப் பார்வையிட்டார்

மேற்றாசன குரு முதல்வர் எஸ் ஈ. செல்வராஜா அடிகளார் மற்றும் கலாமன்ற உறுப்பினர்களையும் அவர் கலாமன்றத்தில் சந்தித்து உரையாடினார்.

(ஐ-17)

3 பிரதேச செயலக பிரிவுகளில்

# 3 ஆயிரம் மா மரங்களுக்கு மருந்து விசிற ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 15

பட்டினிக்கு எதிரான இயக்கத்தினால் கோப்பாய், தெல்லிப்பழை, உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் மூவாயிரத்து 200 மா மரங்களுக்கு மாவிலைத் தத்தி நோயைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்து விசிறப்படவுள்ளது.

பழப்பயிர் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கையை பட்டினிக்கு எதிரான இயக்கம் முறைப்படுத்தவுள்ளது. இதற்கென நான்கு வலு தெளி கருவிகள் கொரியாவிலிருந்து இறக்குமதி செய்து மேற்படி இயக்கத்தினால் இங்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்தத்திட்டத்தின் ஆரம்ப வைபவம் நாளை திங்கட்கிழமை கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப் பகுதியிலுள்ள மாமர உற்பத்தியாளர்கள் மருந்து வீசும் தினத்தில் கோழி உட்பட தமது வீட்டு வளர்ப்பு மிருகங்களை மருந்து விசிறும் மாமரத்திற்கு அண்மையில் செல்ல விடாது பாதுகாக்குமாறு உதவி விவசாய பணிப்பாளர் அலுவலகமும் பட்டினிக்கு எதிரான இயக்கமும் ஆலோசனை வழங்கியுள்ளன.

மாமரங்களுக்கு விசிறப்படும் மருந்து நச்சுத்தன்மையுடையது என்பதால் விசிறும் பொழுதும் விசிறிய பின்னரும் குறிக்கப்பட்ட சுற்றாடலில் நச்சுத்தன்மை இருக்கும் என்பதாலே மேற்கண்ட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பகுதியை அடுத்து ஏனைய 2 பிரதேச செயலர் பிரிவுகளிலும் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் மருந்து விசிறும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து 25 நாள்களுக்கு இந்த மருந்து விசிறும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

(ஐ-5)

### பயிற்சிப் பட்டறை

வேலணை, பெப்: 15

வேலணை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சன சமூக நிலையங்களினால் நடத்தப்படும் பாலர் பாடசாலை ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்தும் முகமாக 'யுனிசெவ்' ஸ்தாபனத்தினால் ஐந்து நாள் பயிற்சிப் பட்டறை வேலணையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ள விரும்பும் ஆசிரியர்கள் தத்தமது சன சமூக நிலையங்கள் ஊடாக விண்ணப்பிக்குமாறு வேலணை பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-ரீ)

# இளைப்பாறிய அதிபர்கள் சங்கம் அங்குரார்ப்பணம்

நல்லூர், பெப். 15

இளைப்பாறிய அதிபர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக இளைப்பாறிய அதிபர்கள் சங்கம் ஒன்று கடந்த சனிக்கிழமை அங்குரார்ப்பணம்செய்யப்பட்டது.

முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் தலைமையில் யாழ் பல்கலைக்கழக 'சிற்றி ஹோல்' மண்டபத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிருவாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர் செ. கேசவராஜன், செயலாளர் மு. திருஞானசம்பந்தபிள்ளை, பொருளாளர் சு. யோகநாதன் உட்பட செயற்குழு உறுப்பினர் ஐவரும் தெரிவாகினர்.

ஓய்வுபெற்ற அதிபர்களுக்கு வழங்கப்படவேண்டிய பணிக்கொடை உட்பட சகலவிதமான கொடுப்பனவுகளையும் உடன் வழங்குமாறு கல்வித்திணைகளத்தைக் கோரவுள்ளதாகவும்—

இதுவரை தமக்கான கொடுப்பனவுகள்கிடைக்காதவர்கள் தமது பூரணவிவரங்களை 'செயலாளர். 153, கே.கே. எஸ். வீதி, கொக்குவில்' என்ற விலாசத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-103)

### புண்ணிய நாச்சியார் தின

# பண்ணிசைப் போட்டி முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ். சைவபரிபாலன சபை புண்ணிய நாச்சியம்மையார் குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்திய பண்ணிசைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட மேற்படி போட்டியில் ஒவ்வொர் பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விவரம் முறையே வருமாறு:-

★ கீழ்ப்பிரிவு:- ர. ப்ருகஸ்வினி (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)தெ. பவனுஜா (மானிப்பாய்,சோதி வேம்படி வித்தியாலயம்), அ. அமிர்த சிந்துஜன் (இணுவில் மத்திய கல்லூரி),

★ மத்தியபிரிவு:-ஸ்ரீ தாரணி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), அ. அமிர்தலோஜன், (கொக்குவில் இந்துக் கல்லூரி), தே. டஷிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி),

★ மேற்பிரிவு:- ந. தனசொரூபி (கொக்குவில் இந்துக்கல்லூரி), ரஞ்சன் கஜானனன் (யாழ். இந்துக் கல்லூரி), பா. தயாபரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி).

மேற்படி போட்டியில் சித்தி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் புண்ணிய நாச்சியம்மையாரின் குருபூசைத் தினமான எதிர் வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

அன்றையதினம் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த பதில் இசைத்துறைத் தலைவர் நயினை ந. வி. மு. நவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார்.—

கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் ந. விஜயசுந்தரம் 'இந்துமதம் கூறும் இல் வாழ்க்கை' என்றபொருளில் சிறப்புரையாற்றுவார்.

சைவபரிபாலன சபையின் பரீட்சைக் காரியதரிசி சைவப் புலவர் வ.கந்ததாமி இத்தகவல்களைத் தெரிவித்தார்.

(ஐ-7)

# மல்லாகத்தில் சில வீடுகளுக்கு மின்சாரம்

வலி. வடக்கு, பெப். 15

மல்லாகம் சந்திக்கு வடக்குப் பக்கமாக மேலும் சில வீடுகளுக்கு இலங்கை மின்சார சபையினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

குளமங்கால் மற்றும் ஏழாலைப் பகுதிகளுக்கு மின் இணைப்பு வயர்கள் பொருத்தப்பட்டுள்ள போதிலும் இப் பகுதிகளுக்கு மின்சாரம் இன்னும் வழங்கப்படவில்லை.

இப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு தற்போதுள்ள மின்மாற்றிகள் வலுகுறைவாக உள்ளதால் வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-86)

# விவசாய உற்பத்திக் கூ. சங்கம் பரீட்சார்த்தமாக ஆரம்பிப்பு

அரியாலை, பெப். 15

யாழ். மாவட்டத்தில் விவசாய உற்பத்தி, நுகர்ச்சிச் சேவைக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றைஆரம்பித்துவைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் தெரிவித்தார்

உரும்பிராய், ஊரெழு ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இக் கூட்டுறவுச் சங்கம் அமைகிறது.

இச் சங்கத்தைக் கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவு செய்யும் நடவடிக்கைகள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. சுமார் நூறு அங்கத்தவர்கள் இக் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விவசாய உள்ளீடுகள் மற்றும் விவசாயப் பொருள்கள் போன்றவற்றை நியாய விலையில் வழங்குவது, விவசாயிகளின் விவசாயப் பொருள்களைச் சந்தைப்படுத்துதல், பழவகைகளைப் பதனிட்டு மக்களுக்கு விநியோகிப்பது ஆகிய சேவைகளை வழங்குவது இச் சங்கத்தின் நோக்கம் ஆகும்.

இச் சங்கம் தற்போது பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படுவதாகவும் இதன் பணிகள் வெற்றியளிக்கும் பட்சத்தில் மாவட்டம் முழுவதுக்கும் அதை விஸ்தரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

(ஐ-17)

### தமிழ்க் குழுக்களிடையே

# முறுகல் நிலை நீடித்தால் ஆயுதங்கள் களையப்படும்

வவுனியாவில் புளொட் மற்றும் ரெலோ அமைப்புகளுக்கிடையே மீண்டும் முறுகல் நிலை உருவாகுமேயாயின் அந்த அமைப்புகளிடமுள்ள ஆயுதங்கள் இராணுவத்தினரால் மீளப் பெறப்படும் என வவுனியாவில் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளதாகத் தனியார் தொலைக்காட்சிச் சேவை ஒன்று தெரிவித்தது.

அந்தத் தொலைக்காட்சி சேவை மேலும் தெரிவித்ததாவது:—

வவுனியாவில் வர்த்தகர்களிடமிருந்து வரி அறவிடுதல் தொடர்பாக எழுந்த பிரச்சினையே புளொட் மற்றும் ரெலோ அமைப்புகளிடையே மோதலுக்குக் காரணமாகும். இதுவரை இரு அமைப்புகளுக்கும் சொந்தமான இரு முகாம்கள் அழிக்கப்பட்டுள்ளன. எந்த வேளையிலும் எந்த அமைப்பும் தமக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கோரினால் அவர்களுக்குப் பொலீஸ் பாதுகாப்பு வழங்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் எனப் பொலீஸார் தெரிவித்துள்ளனர் — என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-10)

# கிராம அலுவலர்களுக்கு விரைவில் இடமாற்றம்

நவாலி, பெப். 15

யாழ். மாவட்டத்திற் பணிபுரியும் சகல கிராம சேவையாளர்களும் முதல் தடவையாக வெவ்வேறு பிரிவுகளுக்கு இடமாற்றஞ் செய்யப்படவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கையை யாழ். அரச அதிபர் மேற்கொண்டுள்ளார். இடமாற்றத்திற்கான விண்ணப்பப் படிவங்கள் இன்னும் சில தினங்களில் சகல பிரதேச செயலர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது.

கிராம சேவையாளர்கள் பலர் நீண்ட காலமாக ஒரே இடத்தில் பணியாற்றி வருவதும் சில கிராம சேவையாளர்களைப்பற்றிப் பொது மக்களிடமிருந்து பல முறைப்பாடுகள் அரச அதிபருக்குக் கிடைத்து வருவதனையும் கருத்திற் கொண்டே இந்த இடமாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-100)

# பயிற்சி நிலையம்

புங்குடுதீவு பெருங்காடு கந்தசாமி கோவில் பகுதியில் புதிதாக தையல் பயிற்சி நிலையம் ஒன்று வேலணை பிரதேச செயலர் செ. இரத்தினத்தினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இத் திறப்பு விழா நிகழ்வில் வேலணை உதவி திட்டமிடல் பணிப்பாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம சேவையாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# வைக்கோல் தேக்கம்

நாவற்குழி, பெப். 15

தனங்கிளப்பு, மறவன் புலோப் பகுதியில் நெல் அறுவடை செய்யப்பட்டு சூடு அடிக்கப்பட்டு வருகிறது. இங்கிருந்து வைக்கோல் முன்னர் வலிகாமம் பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுவது வழக்கம். ஆனால் தற்போது இராணுவ சோதனை நிலையத்தில் அவற்றை பறித்து ஏற்ற வேண்டி உள்ளதால் அவற்றை எடுத்துச் செல்வது குறைவடைந்து உள்ளது. இதனால் வைக்கோலின் விலை இங்கு பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் வைக்கோலை வயல்களிலேயே விட்டுவிட்டுச் செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது. சென்ற வருட வைக்கோலும் பல இடங்களில் இன்னும் தேங்கி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ-102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிவருவோர் குடியகல்வோர் சட்டம் மேலும் இன்னல்களை தரக் கூடியது

## சம்பந்தப்பட்ட சரத்தை நீக்க வலியுறுத்து

கொழும்பு, பெப். 15

மிகவும் தீமை விளைவிக்கத் தக்க நேர்மையற்ற அதே வேளை அடக்கு முறைத் தண்டனைகளை வழங்குகின்ற சட்டம் 1998 இல்நிறைவேற்றப்பட்ட 42 ஆவது இலக்க குடிவருவோர் குடியகல்வோர் சட்டத்தில் உள்ள சரத்து ஆகும். இதனை நீக்குவதற்கு தங்களது ஒத்துழைப்பை நான் கோருகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்ட எம்.பியும் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்றக் குழுத் தலைவருமான ஜோசப் பரராஜசிங்கம் மேற்கண்ட விவரத்தை சட்ட மா அதிபர் சரத் என். சில்வாவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

ஜோசப் பரராஜசிங்கம் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1998 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட குடிவருவோர் — குடியகல்வோர் திருத்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் ஒருவருக்கு பிணை முழுமையாக மறுக்கப்படுவது சட்டமாக்கப்பட்டுள்ளதால் கொடுக்கப்பட்டதண்டனையைஎதிர்த்து விண்ணப்பிக்கவும், விதிக்கப்பட்டதண்டனையை மீண்டும் மீளாய்வு செய்யும்படி கோரவும் ஒருவருக்கு உரிமை மறுக்கப்படுகின்றது.

இந்தச் செயல் நீதியும் நேர்மையுமான வழக்கு விசாரணையின் மரபுகளுக்கு எதிரானது மட்டுமன்றி ஒரு நீதிபதியின் விருப்புரிமையையும் கட்டுப்படுத்தும் செயலாகும்.

இந்தத் திருத்தச் சட்டமானது தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு காட்டுமிராண்டித்தனமான சட்டம் ஆகும். தமிழ் மக்கள் ஆழ்கடலுக்கும் பிசாசுக்கும் இடையில் அகப்பட்ட நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்ட நூறுக்கும் அதிகமான தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் தண்டனையாக 50 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தி ஒரு வருடகால சிறைத்தண்டனையும் அனுபவித்து வருகின்றனர்.

அத்துடன்இந்தசட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்படும் ஒருவருக்கு பிணைமறுக்கப்படுகிறது.

எனவே பாதிக்கப்பட்டவர் நீதிகோரவோ அல்லது தனது பிணைக்கு நண்பர்களிடம் இருந்து பணத்தினைப்பெற்று விடுதலைபெறவோ முடியாத நிலையை இக் கொடிய சட்டம் ஏற்படுத்தியுள்ளது.

இந்த திருத்தச் சட்டம் நீதி நேர்மையான விசாரணை மரபுக்கு எதிரானது. அத்துடன் ஒருநீதிபதியின் விருப்புரிமையை கட்டுப்படுத்தும் ஒரு சட்டமும் ஆகும்.

தீமைவிளைவிக்கும் இந்தச் சட்டத்தினை மறுபரிசீலனை செய்யும்படியும், திருத்தும்படியும் நீதிபதிகளும் தங்களிடம் கோரியுள்ளனர் என்று நான் அறிகின்றேன்.

11-02-99 அன்று நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட அவசரகால நீடிப்புப் பிரேரணை மீது பேசும் பொழுது இந்தச் சட்டத்தில் உள்ள பாரதூரமான குறைகளை எடுத்துக் கூறியுள்ளேன். அத்துடன் ஏற்கனவே பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகால விதிகள் போன்றவற்றால் நசுக்கப்பட்டுப் பல இன்னல்களையும் துன்பங்களையும் அனுபவித்து வரும் தமிழ் மக்களுக்கு இந்தக் கொடூரமான காட்டுமிராண்டித்தனமான சட்டம் மேலும் இன்னல்களை விளைவித்து வருகிறது. எனவே உடனடியாக இச்சட்டத்தை நீக்கி அரசு திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும்.

இப்படி அவர் தெரிவித்துள்ளார். (இ)

# கட்டிலிலிருந்து விழுந்து நோயாளி மரணம்

## ஆஸ்பத்திரியில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 15

ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெற்ற நோயாளி ஒருவர் தாம் படுத்திருந்த கட்டிலில் இருந்து விழுந்து உயிரிழந்தார்.

யாழ் ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றஇச்சம்பவத்தில், அல்லைப்பிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து நல்லூரில் வசித்து வரும் நாகராசா விஜயலட்சுமி (வயது49) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இரு நாட்களுக்கு முன் வார்ட்டில் முட்டு, இருதய நோய் காரணமாக வார்ட்டில் அனுமதிக்கப்பட்ட இவர் சுகமடைந்து சம்பவதினம் துண்டுவெட்டி வீட்டுக்கு அனுப்பப்பட இருந்தார்.

உறவினரின் வருகைக்காக காத்திருந்தவேளையே கட்டிலில் இருந்து விழுந்து தலை அடிபட்டதும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட வேளை அங்கு மரணமானதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த மரணம் தொடர்பான மரண விசாரணையை, யாழ். நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதனின் உத்தரவின் பேரில் மரண விசாரணை அதிகாரி ரி. ஜெயரட்ணம் நடத்தினார்.

யாழ். ஆஸ்பத்திரிப் பொலீஸ் பிரிவுப் பொலீஸ் உத்தியோகத்தர் ஏ. ஜி. எஸ் வீரசிங்க சாட்சிகளை நெறிப்படுத்தினார்.

விசாரணையின் போது இறந்தவரின் மகள் ரவிச்சந்திரன்உதயசாந்தியும், அவரின் கணவர் சுப்பிரமணியம் ரவிச்சந்திரனும் சாட்சியமளித்தனர்.

தலை அடியுண்டே மரணம் சம்பவித்ததால் இது பற்றி மேலும் விசாரணையை விரிவுபடுத்துமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்ட மரண விசாரணை அதிகாரி சடலத்தை மகளிடம் ஒப்படைக்குமாறு பணித்தார்.

விசாரணையின்பின் சடலம் மகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

(இ15)

வலி. கிழக்கு தென்பகுதி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
நீர்வேலி. (வ.து)

சர்வதேச
தொலைத் தொடர்பு
சேவை

உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைத் தொடர்புகளை உடனுக்குடன் குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

★ 24 மணிநேர தொடர்ச்சியான சேவை இடம்பெறும்.
★ இலவசமாகத் தங்குமிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தொலைபேசி இல.:
உள்நாடு: 070 - 212337
வெளிநாடு: 0094 - 70 - 212337

உள் வரும் தொடர்புகள் அழைப்புகளுக்கு உரியவர்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தும் வசதிகள் செய்து தரப்படும்.

அனைவரினது ஆதரவையும் எதிர்பார்க்கின்றோம்.

வலி. கிழக்கு, தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
நீர்வேலி.

(சி/6502)

உ
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்
துன்னாலைவடக்கு, புலோலி, பருத்தித்துறை

பதவி வெற்றிடம்

1. மண்டபப்படி ஐயர் (குருக்கள் உதவியாளர்)
2. மடைப்பள்ளி ஐயர்

மேற்படி ஆலயத்திற்கு கேட்கப்பட்ட இரு பதவிகளுக்கும் பிராமண வர்க்கத்தினரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபாலில் 24 - 02 - 99-க்கு முன் தேவஸ்தானத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பவும். விண்ணப்பத்தில் விலாசம், வயது குறிப்பிடவும். சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம்.

தலைவர்,
தர்மகர்த்தா சபை.

(சி/6495)

# ஆங்கில டிப்ளோமா பட்டதாரிகள் தமக்கு வேலை வழங்கக் கோரி மகஜர்

## வடக்கு-கிழக்கு ஆளுநரிடம் கையளிப்பு

திருகோணமலை, பெப். 15

திருகோணமலை மற்றும் வவுனியா இணைந்த பல்கலைக்கழகங்களில் பயின்ற நூற்றுக்கும் மேற்பட்ட ஆங்கில டிப்ளோமா பட்டதாரிகள் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தமக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படாமை குறித்து வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தனாவுக்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

தமக்கான நியமனங்களை வழங்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருக்கு ஆளுநரால் பணிப்புரை வழங்கப்பட்டிருந்த போதும் இந்த நியமனங்கள் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் — மாகாண கல்வி அமைச்சு இந்த நியமனங்களை வழங்க முடியாது என்று செயலர் கூறியதாகவும் — இவர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் ஆயிரத்து 800 ஆங்கில ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாகவும் இந்த அடிப்படையில் தமக்கான நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் இவர்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பாகக் கல்முனையில் இடம்பெறவுள்ள ஆளுநர் நடமாடும் சேவையின் போது ஆளுநரை நேரில் சந்தித்து உரையாடவுள்ளதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் திருகோணமலைக்கு விஜயம் செய்த கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மேலதிக செயலாளர் எஸ். யோகநாதன் ஆகியோருடனும் தமக்கு நியமனங்கள் வழங்குமாறு கோரி மகஜர்களை இவர்கள் சமர்ப்பித்தனர்.

## வயல்களில் வெள்ளம்

வலி.தென்மேற்கு, பெப். 15

அண்மையில் பெய்த கடும் மழையினால் அறுவடைக்குத் தயாராக இருந்த நெல் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

நவாலி வழுக்கையாற்றுப் பகுதியில் மட்டும் 220 ஹெக்டேயரில் நெற்கதிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வயல் சொந்தக்காரர்கள் வெள்ளத்தை நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் வெளியகற்றி வருகின்றனர்.

[இ-185]

## சமையலுக்கு பால்மா!

சுழிபுரம், பெப். 15

தேங்காய் விலை அதிகரித்திருப்பதால் சுழிபுரம் பகுதியில் அனேகர் ஹைலாண்ட் பால் மாவை சமையலுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் பால்மாவுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.

(இ-28)

## நெல் அறுவடை

சுழிபுரம், பெப். 15

சுழிபுரம் பகுதியில் நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. [illegible] நெல் விதைத்தவர்களே முதலில் அறுவடை செய்கின்றனர்.

(இ-28)

## ப. நோ. கூ. சங்கக் காசாளர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 15

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க காசாளர் சுப்பிரமணியம் சுரேஷ்குமார் (19 வயது) என்பவர் படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரது கைது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் அவரது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலக அதிகாரி எஸ். சிறீதரன் இவரது கைது தொடர்பாகப் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார்.

கைதானவர் ஊரெழுஇராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டதாக சிறீதரன் கூறினார்.

(இ-3)

## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 15

குடாநாட்டில் அதிகரித்து வரும் வீதிவிபத்துச்சம்பவங்களில் நேற்றும் இருவர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் குறூஸ் வீதியில் நேற்று இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்ததாகமோட்டார் சைக்கிளை ஓட்டிவந்த வரும் குறூஸ் வீதியைச் சேர்ந்தவருமான இரத்தினம் வெனிபிறீமன் (வயது 22) என்பவரும் இளவாலையில் இடம்பெற்ற இரண்டு சைக்கிள்களுக்கிடையிலான விபத்தில், இளவாலையைச்சேர்ந்த புஸ்பராசா கலீஸ் (வயது10) என்பவருமே காயமடைந்தவர்களாவர்.

(இ-15)

உ
சங்கானை
நிகரை ஞானவைரவர் கோயில்
அலங்காரத் திருவிழா விஞ்ஞாபனம்

அலங்காரத் திருவிழா உற்சவம் நிகழும் மாசித் திங்கள் 03 ஆம் நாள் (15-02-1999) திங்கட்கிழமை ஆரம்பமாகி 14 தினங்கள் அலங்காரத்திருவிழா நடைபெற்று, 15 ஆம் திருவிழா மாசி மகத்தினத்தன்று சங்காபிஷேகம்நடைபெறும். இத்திருவிழாக்களில்அடியார்கள் அனைவரும் வருகை தந்து பெருமானின் அருட்கடாட்ச பெறுபேறுகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

நிகரை ஞானவைரவ கோயில்
பரிபாலனசபை.

(63124)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குக்கு மட்டும் தேர்தல் நடத்த முயற்சி?

கொழும்பு, பெப். 15

வடக்கு—கிழக்கு மாகாண சபைக்கு முழுமையாகத் தேர்தல் நடத்தாது கிழக்கு மாகாணத்துக்கு மட்டும் தேர்தல் நடத்த அரசு முனைவதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கு — கிழக்கு இணைப்பை நீக்கி கிழக்கில் மட்டும் தேர்தலை வருட நடுப்பகுதியில் நடத்த அரசு முனைவதாக அந்தச் செய்தி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

வடக்கில் தேர்தல் நடத்தக் கூடிய பாதுகாப்புச் சூழ்நிலை இல்லை என அறிக்கைகள் கூறுவதால் கிழக்குக்கு மட்டும் தேர்தலை நடத்தித் தெரிவாகும் குழுவிடம் மாகாண சபை நிர்வாகத்தைக் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

தென் மாகாண சபைத் தேர்தலை வருட நடுப்பகுதியில் நடத்தும்போது கிழக்கிலும் தேர்தலை நடத்த அரசு ஆலோசிப்பதாகக் கூறப்படுகின்றது. (இ-3-10)

# பத்திரிகையாளர் யோகநாதன் காலமானார்

யாழ்ப்பாணம், பெப். 15

மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் கா. யோகநாதன் தமது 62 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

இவர் 35 வருடங்களாக ஓர் உழைக்கும் பத்திரிகையாளராக ''ஈழநாடு'' பத்திரிகையில் பணிபுரிந்தவர். அப்பத்திரிகையின் கனிஷ்ட செய்தியாளராகப் பணியாற்ற ஆரம்பித்த யோகநாதன் பின்னர் செய்தி ஆசிரியராகவும் பதில் ஆசிரியராகவும் உயர்ந்தார்.

குடாநாட்டில் 1960 களின் முற்பகுதியில் பரபரப்புடன் வாசிக்கப்பட்ட கோகிலாம்பாள் வழக்கு விசாரணையை விவரமாகவும் சுவாரஸ்யமாகவும் எழுதி வாசகர்கள் மத்தியில் அபிமானம் பெற்ற நீதிமன்றச் செய்தியாளராக இவர் திகழ்ந்தார்.

கடந்த 12 நாள்களாக யாழ். ஆஸ்பத்திரியில் மலேரியாநோய்க்குச் சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்றுக் காலை அங்கு மரணமானார். கொடிகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரது இறுதிக்கிரியைகள் யாழ். அத்தியடியில் நடைபெறும். (அ-15)

எமது நேற்றைய
புதிய வெளியீடு!
அஜித் - மாலதிகா
நடித்த
① உன்னைத்தேடி
வீடியோ CD
வெளியீடுகள்!
① துள்ளாத மனமும் துள்ளும்
① நினைவிருக்கும் வரை
① நேசிக்கிறேன்
① கள்ளழகர்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/6503)

BITSMANS
கல்வி நிறுவனம்
மானிப்பாய்.
A/L 99
PAPER CLASS
வணிகக் கல்வி
ஆசிரியர்: V. முரளி
ஆரம்பம்: 16—02—99
செவ்வாய் 3-00 P. M.
(63116)

## சமாதானம்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஐந்து நாயக்கதேரர்கள், இரு ஆயர்கள், இந்து—முஸ்லிம் மதத்தலைவர்கள்மற்றும் சமுதாயத்தில் முன்னணியில் உள்ள பிரமுகர்களான டாக்டர் ஏ. ரி. ஆரியரத்தின, ஐராங்கனிசேரசிங்க, டபிள்யூ டி. அமரதேவா ஆகியோரும் இந்தக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றனர். கூட்டமைப்பில் தொழிற்சங்கங்களும் இடம் பெற்றுள்ளன.

இந்தக்கூட்டமைப்பு சமீபத்தில் கொழும்பில் கூடியபோது சமாதானப் பேரணியையும் பொதுக் கூட்டத்தையும் நடத்த முடிவு செய்யப்பட்டது. (இ-10)

## ஒவ்வோர்...

(முதலாம் பக்கத் தொடர்)

தில் மட்டும் முகாம் அமைத்து இயங்க அனுமதிப்பது என்று எடுக்கப்பட்ட முடிவின்படி வவுனியா சிறுவர் பூங்காவுக்கு அருகே இருந்த புளொட் அமைப்பின் அலுவலகம் மூடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த அமைப்புக்களின் உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் நடமாடினால் அவர்களைக் கைது செய்யும் அதிகாரம் பாதுகாப்புப் படையினரால் பொலீஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது. (இ-3-க)

## அடுத்த கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)

அதேநேரம் — எதிர்வரும் 24 ஆம் திகதியளவில் திருமலையில் இருந்து காங்கேசன் துறைக்குப் பயணிகள் கப்பல் சேவை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் — அக்கப்பலில் செல்ல 300 பயணிகளை அனுப்புமாறும்— வவுனியா அரச அதிபர் கேட்கப்பட்டுள்ளார். (இ-3-6-164)

## ஈ. பி. டி. பி...

(முதலாம் பக்கத் தொடர்)

மரணமானார்.

பின்னர் அவரது சடலம் மரண விசாரணைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச்சம்பவத்தை அடுத்து அப்பகுதி படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் இடம் பெற்றது.

குடாநாட்டில் இதுவரை ஏழு உள்ளூராட்சிச்சபை உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் மூவர் ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள்.

நேற்று சுட்டுக் கொல்லப்பட்ட கந்தசாமியின் சடலம் இன்று வலி-கிழக்கு பிரதேச சபை அலுவலகத்தில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியைகள் ஆவரங்காலில் நடைபெறும்.

இவரது மரணத்துக்கு துக்கம் அனுஷ்டிக்கும் வகையில் ஈ. பி. டி. பி. அலுவலகங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

இவரின் மரணத்துக்குக் அனுதாபம்தெரிவித்துதமிழர் விடுதலைக் கூட்டணி செய்தி ஒன்றை விடுத்துள்ளது.

இ-3-6-15-109-133-139-173

## யாழ். ஆஸ்பத்திரியில்

# முக்கிய பரிசோதனைகள் செய்ய முடியாத நிலை

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நிலவும் சில பரிசோதனைகளுக்கு அவசியமான மருந்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு,உபகரணத் தட்டுப்பாடு ஆகியவற்றால் அத்தியவாசிய சில பரிசோதனைகள் தடைப்பட்டுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது நெருப்புக் காய்ச்சல் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இந்த நோயைக் கண்டறிவதற்காக ஆய்வு கூடத்தில் பயன்படுத்தப்படும் மருந்து அறவே இல்லாது போயுள்ளது.

இதனால் இந்த நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள்தேவையான பரிசோதனையை மேற்கொள்ள வெளியிடங்களையே நாடவேண்டியுள்ளது.

வசதி குறைந்த மக்கள்பலர் பரிசோதனையை மேற்கொள்ள முடியாது சிகிச்சையையும் ஒழுங்காக மேற்கொள்ள முடியாது அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இதேபோலவே இருதயம் தொடர்பான நோய்க்கு மேற்கொள்ளப்படும் ''கொலஸ்ரோல்'' பரிசோதனையும், அதிக அளவில் மேற்கொள்ள முடியாத நிலை ஆய்வு கூடத்துக்கு ஏற்பட்டுள்ளது.

ஆய்வு கூடத்தில் இப்பரிசோதனையை மேற்கொள்வதற்காக உபயோகப்படுத்துவதற்கு நான்கு கொலோரிமீற்றர்கள் இருந்த இடத்தில் தற்போது ஒன்று மாத்திரமே உள்ளது.

இதனால் இருதய நோயாளிகள் பலர் இப்பரிசோதனைகளை வெளி இடங்களில் பணம் செலுத்தி செய்ய வேண்டியிருப்பதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

இ பரிசோதனையை ஒரு தடவை மேற்கொள்ள 150 ரூபாவில் இருந்து 175 ரூபா வரை செலவாகிறது. (இ-15)

# வன்னியில் இருந்து 15 ஆயிரம் பேர் மீளக் குடியமர யாழ்ப்பாணம் வருவர்

## ஜேர்மன் பிரதித் தூதுவர் தகவல்

யாழ்ப்பாணம் பெப். 15

வன்னிப்பகுதியிலிருந்து 15 ஆயிரம் அகதிகள் யாழ். கடல் நீரேரி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு திரும்பும் சாத்தியங்கள் இருப்பதால் அவர்கள் மீளக்குடிமர்வதற்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட வேண்டும்.

யாழ். செயலகத்தில் நடைபெற்ற செயலக உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது இலங்கையிலுள்ள ஜேர்மன் தூதரகத்தின் பிரதி உதவித் தூதுவர் டாக்டர் வொன் போத்மர் தெரிவித்தார்.

யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில்நடைபெற்றஇந்தக் கலந்துரையாடலில் பிரதித் தூதுவருடன் ஜேர்மன் பத்திரிகையாளர் டக்மா ஜெம், ஜேர்மன் தொழில் நுட்பநிறுவனப்பிரதிநிதி அல்பாக் ஆகியோரும் கலந்ததுகொண்டனர். அவர் மேலும் அங்கு உரையாற்றும் போதுகூறியதாவது:

இந்த அகதிகள் மீளக்குடியமர வரும் பொழுது தமது வீடுகளிலும் சொந்த இடங்களிலும் மீளக் குடியமரமுடியாத நிலை ஏற்படுமாயின் அவர்களை நலன்புரி நிலையங்களில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் புனரமைப்புச் செய்வவற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இடையில் நிறுத்தப்பட்ட பாடசாலைக் கட்டட வேலைகளை இந்த ஆண்டில் தொடர்ந்து செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

நீர்விநியோகத் திட்டம், வீடுகள் புனரமைப்புத் திட்டம் போன்றவை உட்பட ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்து நடைபெறும் —

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-5-100)

# நாளை அபூர்வ சூரிய கிரகணம்

நாளை 16 ஆம் திகதி சூரிய கிரகணம் ஏற்பட உள்ளது. ஆண்டுதோறும் ஏற்படும் கிரகணம் என்றாலும் இது ஒருவகையில் அபூர்வமானது. இந்தியாவிலும் இலங்கையிலும் இதனைப் பார்க்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சூரியனின் சுற்றுப்பாதையை 'மெடோனிக் சுழற்சி' என்று அழைப்பர். 19 ஆண்டுகளுக்கு ஒரு முறை சூரியன் இப் பாதையின் ஒரு சுற்றை முடிக்கிறது. 16 ஆம் தேதி அச் சுற்று முடிகிறது. அப்போது சூரிய கிரகணம் ஏற்படுகிறது. எனவே இது விசேடமானதாகும். பூமி மற்றும் நட்சத்திர மண்டலங்களின் அமைவிடத்துடன் ஒப்பிடும்போது சூரியனும் சந்திரனும் தமது பழைய இடங்களுக்கு 19 ஆண்டுகள் கழித்து வந்து சேருகின்றன.

19 ஆண்டுகளுக்கு முன்பு 1980 பெப்ரவரி 16 ஆம் தேதியும் சூரிய கிரகணம் ஏற்பட்டது. அதுவும் இந்தியாவில் தெரிந்தது. 19 ஆண்டு கால சூரிய சுற்றுப்பாதை காரணமாக அதே தேதியில் தற்போதும் சூரிய கிரகணம் ஏற்படுகிறது. இது இந்தியாவின் தென்பகுதி, இந்தியப் பெருங்கடல், பசிபிக் பெருங்கடல், ஆஸ்திரேலியாவின் ஒரு பகுதியில் மிகத் தெளிவாகத் தெரியும். (ஐ-10)

## ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

யான இந்த அறிவிப்பால் சிவராத்திரி விரதத்துக்கு ஆலயங்களுக்குச் செல்வதா அல்லது வீடுகளுக்குள் முடங்குவதா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்திருந்தது.

யாழ்.மாவட்டத்தில் நேற்று இரவு ஊரடங்கை நீக்கவேண்டும் என்று சபரிமலை ஐயப்பதாஸன் குருக்கள் ஜனாதிபதியிடம் கோரி இருந்தார்.

ஊரடங்கு நீக்கப்பட்டது குறித்து பாதுகாப்பு அமைச்சு நேற்று முன்தினமே அவருக்கு அறிவித்திருந்தது என்ற விவரம் தற்பொழுது தெரியவந்துள்ளது.

அந்த விவரம் யாழ். மாவட்ட மக்களுக்கு நேற்று முன்தினமே அறிவிக்கப்பட்டிருந்தால் நேற்று அவர்கள் அமைதியாக தமதுவிரதத்தை அனுஷ்டித்திருப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# மாதகல் விவசாயிகளுக்கு உதவி

மாதகல் பகுதி விவசாயிகளுக்கு நெற்செய்கைக் கடனாக தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 140 பேருக்கு அகதிகள் புனர் வாழ்வு நிறுவனம் 7 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இதனை நினைவு கூர்ந்து கௌரவிக்குமுகமாக கடந்த ஆறாம் திகதி மாதகல் விவசாயிகளால் கொண்டாடப்பட்ட ''வயல் விழா'' நிகழ்வில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உபதலைவர் அ. நல்லதம்பி, விவசாய விரிவாக்க உதவிப்பணிப்பாளர் எஸ். சிவலோகநாதன், விவசாய உதவிப்பணிப்பாளரும் பெரும்பாக உத்தியோகத்தருமான கே. பாமா, கெயர் நிறுவன பிரதிநிதி எஸ். இராசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மாணவர் அமைப்புகளை...

(முதலாம் பக்கத் தொடர்)

அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், அரச திணைக்களத் தலைவர்கள், வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தலைமையில் கூடி ஆராய்ந்த பின்னர் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ரெலோ அமைப்பினரை நேற்றுச் சந்தித்து, மாணவர்களின் கல்வி பாதிக்காமல் இருக்கக் கட்சியின் சார்பில் இயங்கும் மாணவர் அமைப்புக்களைக் கலைத்து அவர்களிடம் இருந்து கட்சி அடையாள அட்டைகளை மீளப்பெற வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இரு தரப்புகளும் மோதல்களை நிறுத்தி அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் —

பொதுமக்கள் நடமாட்டமுள்ள இடங்களில் ஆயுதப் பாவனை செய்யக்கூடாது என்றும் — அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் புளொட் அமைப்பினரை நாளை சந்திக்கவிருக்கின்றனர். (இ-3-21-164)

# ஒப்படைப்பு

மாங்குளம் பகுதியில்நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் ஒன்றில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவரின் சடலம் படையினரால் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க அங்கு அனுப்பப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சங்க வவுனியாக் கிளையினரிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த சடலம் நேற்று கல்விலானில் வைத்துப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 15-02-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org